# ஸ்ரீராமானுஜன்

1928 ஆகஸ்டு

JL
31m N27GR
N28.2.7
22347

No. M. 1930

ஓம் :
வந்தேமாதரம்.

Annual Subscription Rs. 2

# கிராமானுகூலன்.

# GRAMANUKULAN.

[ ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை ]

KUMBAKONAM.

புத்தகம் 2 | 1928ளு ஆகஸ்டுமீ விபவஇல் ஆடிமீ | ஸஞ்சிகை 7

**சந்தா விபரம்.**

| | | | |
|---|---|---|---|
| உள்நாட்டுக்கு வருட சந்தா [தபாற்கூலி உள்பட] | ... ரூ | 2 | 0 0 |
| வெளிநாடுகளுக்கு " " | " | 2 | 8 0 |
| தனிப்பிரதி " " | " | 0 | 3 0 |

விஷய சூசிகை.


| | | பக்கம் |
|---|---|---|
| 1 | ஸ்தல ஸ்தாபன [illegible]த மசோதா பத்திராதிபர் | 131 |
| 2 | பார்டோலி வெற்றி " .... | 133 |
| 3 | மன்னார்குடி தாலூகா போர்டு " .... | 133 |
| 4 | தஞ்சாவூர் ஜில்லா கி. உ. சங்கம் " ... | 134 |
| 5 | நாகப்பட்டணம் தாலூகா கி. உ. சங்கம் " .... | 134 |
| 6 | கிராம புனருத்தாரணம் (ஸ்ரீமான் M. கிருஷ்ணசாமி ரெட்டியார் செங்கற்பட்டு ஜில்லா போர்டு தலைவர்) | 135 |
| 7 | மேட்டூர் திட்டம் (ஸ்ரீமான் N. திருவேங்கடத்தய்யங்கார் B.A., B.L., F.M.U. கும்பகோணம்) " .... | 137 |
| 8 | பண்டைத்தமிழரின் மேம்பாடு (ஸ்ரீமான் ஊ. சா, வேங்கடராம ஐயர்) .... | 139 |
| 9 | கூட்டுறவு பண்டகசாலைகளின் பொதுநன்மைகள் (ஸ்ரீமான் ஊ. சா. வேங்கடராம ஐயர்) ... | 141 |
| 10 | ராணா பிரதாப சிம்மன் or "ரஜபுத்திர தேசபக்தி" (ஸ்ரீமான் S. மகாலிங்க சர்மா) .... | 143 |
| 11 | கிராமஉத்தியோகஸ்தர்களும் டாக்டர்சர்டிபிகேட்டும் | 145 |
| 12 | அன்னதான பலன் .... .... | 146 |
| 13 | மன்னார்குடி தாலூகா கி. உ. சங்கம் .... | 147 |
| 14 | தஞ்சாவூர் தாலூகா கி. உ. சங்கம் .... | 148 |
| 15 | கும்பகோணம் தாலூகா கி. உ. சங்கம் .... | 148 |
| 16 | சென்னை ராஜதானி கி. உ. சங்கம் ... | 148 |
| 17 | திருச்சிதாலூகா கர்ணங்கள் சங்கம் ... | 149 |
| 18 | காவிரிஜலம் பகிர்ந்துகொள்வதைப்பற்றி தகராறு... | 149 |
| 19 | 40 லக்ஷரூபாய் வரிவஜா .... ... | 149 |
| 20 | விளம்பரங்கள் .... ... | 150 |


**விளம்பர விகிதம்.**

| | |
|---|---|
| பக்கம் 1க்கு [2-கலம்] மீ 1க்கு ரூ. 10 | காலம் ½க்கு மீ 1க்கு ரூ. 2-8-0 |
| பக்கம் ½க்கு [1-கலம்] " 5 | இஞ்சு 1க்கு " அணா 8 |

நீடித்த விளம்பரங்களுக்கு [illegible]ஜருக்கெழுதித் தெரிந்துகொள்ளவும்

N. ஆபத்ஸகாய ஐயர்—பத்திராதிபர்.

மருதாந்தநல்லூர்—திப்பராஜபுரம் போஸ்டு.

ரிஜிஸ்டர் நெ. M. 1930]

வந்தேமாதரம்.

[வருட சந்தா ரூபா 2—0—0.

223471

# கிராமானுகூலன்.

[ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.]

"ஒன்று பட்டாலுண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கி லனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கெதுவேண்டும்."—பாரதி.

"நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே."—(ஔவை)

| புத்தகம் | விபவ ஹு ஆடி மீ | ஸஞ்சிகை |
|---|---|---|
| 2 | | 7 |

# ஸ்தல ஸ்தாபன திருத்த மசோதா.

முதன் மந்திரி கனம் டாக்டர் சுப்பராயன் ஜில்லா போர்டு, தாலூகா போர்டுகளை திருத்தியமைப்பதைப்பற்றி ஒரு மசோதா கொண்டுவந்திருக்கிறார். அதைப்பற்றி பொதுஜன அபிப்பிராயங்களை அறியவேண்டி தாலூகா ஜில்லா போர்டுகளுக்கு அனுப்பிப் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. உலகத்தில் தனக்கு ஏற்பட்டுள்ள அதிகாரத்தையும், செல்வாக்கையும் பிறருக்கு விட்டுக்கொடுக்க யாரேனும் தானாக சம்மதித்ததுண்டா? அதேமாதிரி இந்த மசோதாவிஷயத்திலும் தாலூகா ஜில்லா போர்டுகளில் பெரும்பான்மையானவை தங்கள் அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கின்றன. முக்கியமாக தாலூகா போர்டுகளை எடுத்துவிடவேண்டுமென்றும், ஜில்லா போர்டுக்கு மெம்பர்களை நேர்முகமாக தெரிந்தெடுக்கவேண்டுமென்றும் கூறியிருப்பது மிகவும் சரியான ஏற்பாடாகுமென்பது நமது அபிப்பிராயம். ஆனால் அதற்குப் பதிலாக கிராம பஞ்சாயத்துக்களை ஒவ்வொரு ரெவினியூ கிராமத்திற்கும் தவராமல் சட்டப்படி உடனே ஏற்படுத்திக்கொள்ளவேண்டியதைக் கட்டாய முறை[illegible] செய்து அமைத்துவிடவேண்டும். தாலூகா [illegible]களுக்குக் கொடுத்துவந்த லாண்டு செஸ்ஸின் பாதித் தொகையை கிராம பஞ்சாயத்துகளிடம் கொடுத்துவிடவேண்டும். கிராம பஞ்சாயத்துகளுக்கு யாதொரு நிரந்தர வரும்படியில்லாமல் ஒவ்வொன்றுக்கும் வரி விதித்துக்கொள்ளவேண்டுமென்று ஏற்படுத்தியிருப்பதினாலேயே கிராம பஞ்சாயத்துகளின் முன்னேற்றம் மிகுதியும் தடைப்படுவதுடன் கக்ஷிப்பிரதிக்கக்ஷியும் அதிகமாகிக்கொண்டுவருகிறது. பெரிய மிராசுதார்கள் பஞ்சாயத்துகளிடம் அதிருப்திப்படுவதற்கும் அதுவே காரணமாகும். தாலூகா போர்டுக்கு ஏற்பட்டிருந்த சகல வருமானங்களையும் அந்தந்த கிராம பஞ்சாயத்து அடையும்படி சட்டப்படி அனுமதி அளித்துவிட்டால் அதற்கு நிரந்தரமான வரும்படி ஏற்பட்டுவிடும். கெவர்ன்மெண்டார் கொடுக்கும் கிராண்டுகளை பஞ்சாயத்துகளின் வரும்படிக்கு தக்கபடியும் அவசியமான காரியங்களுக்கு தக்கபடியும் கொடுத்துவரலாம். இந்த மாதிரி ஏற்பாடு செய்யப்பட்டால் வெகுகாலமாக பல கிராமங்கள் ரோட் செஸ் செலுத்திவந்தும் ரோட் வசதிகூட அடையாமல் கஷ்டப்பட்டுக்கொண்டு வருகிறதிலிருந்து 2; 3 வருஷங்களுக்குள் நிவர்த்தி செய்துகொண்டுவிடும். தாலூகா போர்டார் செலவழித்து வந்த தொகையானது ஒரு சிறிதுபாகம் உண்மையான வேலைக்கும்

பெரும்பாகம் கண்டிராக்டர்களுக்கு லாபமாகவும் உத்தியோகஸ்தர்களுக்கு சம்பளமாகவும் படியாகவும் செலவழிக்கப்பட்டு வருகிறதன்று முழுத் தொகையும் உண்மையான அபிவிருத்தி வேலைக்கே செலவழிக்கப்படும். தாலூகாபோர்டுகளை எடுத்துவிடுவதினால் நிர்வாகம் தடைப்பட்டு சீர்கெட்டுவிடும் என்று சொல்லுகிறவர்கள் இம்முறையினால் நிர்வாகம் செம்மைப்பட்டு கிராமங்கள் ஒவ்வொரு விஷயத்திலும் அதிக சீர்திருத்தமடைந்து செழிப்புற்று விளங்குவதை வெகு சீக்கிறத்தில் காணலாகும்.

சில தாலூகாபோர்டுகள் கிராமப்பஞ்சாயத்து மகாநாடுகளில் தீர்மானிக்கப்பட்டு பஞ்சாயத்து ரெஜிஸ்டிரார் ஜெனரலால் அங்கீகரிக்கப்பட்டு சில வரும்படிகளை கிராம பஞ்சாயத்துகளுக்கு கொடுக்க வேண்டுமென்று கூறியதை கொடுக்கமுடியாதென்று தீர்மானம் செய்துவிட்டதைக்கொண்டு அவர்களுக்குத் தங்கள் அதிகாரத்தின்மேல் திருஷ்டியேயொழிய கிராமங்களுக்குத் தாங்கள் செய்யவேண்டிய கடமையில் கவலையில்லை என்பதைக் காட்டிவிட்டது. ஜில்லா போர்டுகளுக்கு தாலூகா போர்டுகளிலிருந்து மெம்பர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதினாலும் சிலமெம்பர்கள் நியமனம் செய்யப்படுவது என்ற கொள்கையிருப்பதினாலுமே முக்கியமாக கக்ஷிப் பிரதிகக்ஷியும் நிர்வாக ஊழல்களும் தவரான கொள்கைகளும் கையாளப்பட்டுவர இடமேற்பட்டுவிட்டது. உதாரணமாகதாழ்ந்தவகுப்பார்களுக்கும்எலக்ஷனில் வரமுடியாத சிறுபான்மையோருக்கும் பாதுகாப்பளிப்பதற்காக சிலமெம்பர்களை நியமனம் செய்ய கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தை சுயநலம்கருதி மறுபடியும் தாம் தெரிந்தெடுக்க இடமேற்படுத்திக்கொள்ள வேண்டி பொதுஜனங்களால் எலக்ஷனில் நின்றும் தோற்கடிக்கப்பட்டும் அநேலகுப்பார் ப்லர் எலக்ஷன் மூலமாய் ஸ்தானம் அடைந்திருந்தும் அந்த வகுப்பாரையே நாமினேஷன் செய்யும் கொடிய வழக்கம் சில ஜில்லா போர்டு தலைவர்களால் கையாளப்பட்டு வருகிறது. ஏன் சில மந்திரிகளும் இந்த வழக்கத்தை அனுஷ்டிக்கிறார்கள். தஞ்சாவூர் மாயவரம் இரண்டு தாலூகாபோர்டிலும் முன் பிரசிடெண்டாயிருந்தவர்கள் மெம்பர் ஸ்தானத்துக்கு எலக்ஷனில் நின்று தோல்வியடைந்தார்கள். அவர்களை நியமனமூலமாக அங்கத்தினராக்கப்பட்டு பாக்கி நியமன அங்கத்தினர்களின் ஓட் பலத்தைக் கொண்டு பிரசிடெண்டாக தெரிந்தெடுக்கப்பட்டுவிட்டார்கள். அது ஜனநாயகமுறைக்கு ஒத்ததா? பொதுஜனங்களால் எலக்ஷனில் தோற்கப்பட்டவர் பிரசிடெண்டாக ஏற்படும்படி நியமன அதிகாரம் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுவிட்டதென்று ஏற்படவில்லையா? இதனால்நியமன அதிகாரம் அடியுடன் ஒழியவேண்டியகாலம் வந்துவிட்டது. ஜில்லா போர்டுக்கும் நியமன அதிகாரம் கூடவே கூடாது. நேர்முகமான தேர்தலே இன்றியமையாதது. நிர்வாக உத்தியோகஸ்தர்கள் போர்டினாலேயே தெரிந்தெடுக்கப்பட்டவராயும் போர்டின் ஆளுகைக்கு உட்பட்டவராயுமேயிருக்கவேண்டும். இந்த விஷயங்களை நன்றாய் ஆராய்ச்சிசெய்து தாலூகா போர்டுகளும் ஜில்லா போர்டுகளும் எதிரான அபிப்பிராயங்கள் கொடுத்திருக்கின்றன என்பதை பெரிதாக மதிக்காமல் தன்னலங்கருதி அதிகாரத்தை இழக்க மனமில்லாமல் செய்த செய்கையாகுமென்பதை உணர்ந்து கிராம புனருத்தாரணத்திற்கு அவசியமான மாறுதல்களுடன் இந்த ஸ்தல ஸ்தாபன திருத்த மசோதாவை நிறைவேற்றிவைக்கவேணுமாய்க் கோருகிறோம்.

---

## சந்தாநேயர்களே !

சந்தா தொகையை உடனே அனுப்பிவைக்க வேணுமாய் சென்ற சஞ்சிகையில் நாம் வேண்டிக்கொண்டதை அனுசரித்து வெகு சிலரே பணம் அனுப்பிஉள்ளார்கள். வி. பி. அனுப்புவதால் ஒவ்வொரு சந்தாதாரருக்கும் 3 அணா நஷ்டமுண்டாவதைக்கருதித் தயங்குகிறோம். இம்முறையும் சந்தா தொகையை மணியார்டர் செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

சந்தாநேயர்கள் ஒவ்வொருவரும் ஒரு புதிய சந்தாதாரரைசேர்த்துக்கொடுத்து "கிராமானுகூலனை" ஆதரித்து வரவேணுமாய்க் கோருகிறோம்.

செப்டம்பர் 15உக்குள் பணம் அ[illegible] வர்களுக்கு வி. பி. அனுப்பி வரப்படும். [illegible] செய்து வி. பி. யைப்பெற்றுக்கொண்டு [illegible] செலுத்திவைப்பீர்களென்று நம்புகிறோம்.

பத்திராதிபர்.



# பார்டோலி வெற்றி.

பார்டோலியில் விவசாயிகள் நடத்திவந்த வரிகொடாஇயக்கம் பூர்ண வெற்றிபெற்று விட்டது. கெவர்ன்மெண்டார் இயக்கத்தின் உண்மையை உணர்ந்து ராஜிக்கு வந்துவிட்டது போற்றத்தக்கதே! இந்த வெற்றிக்கு முக்கிய காரணஸ்தர் ஸ்ரீமான் வல்லபாய்படேல் ஆவர். அன்னார் தலைமையின்கீழ் தொண்டர்கள் நெறிதவராமல் நடந்துகொண்டதும் கிராமவாசிகள் ஸ்திரீகள் உள்பட என்ன கஷ்டம், பொருள்நஷ்டம் ஏற்பட்ட போதிலும் அஹிம்சையிலிருந்து சிறிதும் நழுவாமல் நடந்துகொண்டதும் கிராம உத்தியோகஸ்தர்கள் கிராமத்தின் உத்தியோகஸ்தர்கள் தான் என்பதை உணர்ந்து நியாயவிரோதமாக ஜனங்கள் இம்சிக்கப்படுவதைக்கண்டு சகியாது ராஜிநாமா கொடுத்துவிட்டதும் இந்த வெற்றிக்கு முக்கியகாரணங்களாகும். கெவர்ன்மெண்டாரும்உண்மைநிலையைஉணர்ந்து சர்தார் ஸ்ரீமான் வல்லபாய்படேல் விதித்த நிபந்தனைகளை ஒப்புக்கொண்டு பறிமுதல்செய்த நிலங்களை அந்தந்த சொந்தக்காரரிடம் திருப்பிக்கொடுத்துவிடும்படியும், தண்டனையடைந்தவர்களையும் விசாரணையிலுள்ளவர்களையும் உடனே விடுதலைசெய்தும் வேலையை ராஜிநாமாகொடுத்த எல்லா கிராம உத்தியோகஸ்தர்களையும் திரும்பவும் வேலையில் நியமித்தும் வரிவிஷயமாய் விசாரிக்க நீதியிலாகாவில் உயர்பதவியிலுள்ள ஒருவரை நியமித்தும் விட்டனர். இந்த வெற்றியானது பார்டோலிக்கு மாத்திரம் ஏற்பட்ட வெற்றியா? இந்தியாவுக்கே ஏற்பட்டதாகும். இந்தியாவில் புதிய சகாப்தம் தொடங்கிவிட்டதற்கு அறிகுறியாகும். அஹிம்ஸாதர்மத்திலிருந்து சிறிதும் பிறளாமல் நடத்தும் எந்த போராட்டமும் வெற்றிகாமாகமுடியுமென்பதை நிரூபணம்செய்தாகிவிட்டது. தஞ்சாவூர்ஜில்லாவில்நடந்தவரிகொடாஇயக்கம் இம்மாதிரி பூர்ணவெற்றியடையாமல் போனதற்கு ஸ்ரீமான் வல்லபாய்படேல் போன்ற ஒருதலைவர் இந்த ஜில்லாவிலிருந்து நடத்திவைக்காததேயாகும். ஸ்ரீமான் வல்லபாய்படேல் காட்டியவழியைப் பின்பற்றிதலைவர்கள் நடந்து கொண்டு இந்திய சுயராஜ்ஜியம் அடையவழி தேடுவார்களென்று நம்புகிறோம்.

---

# மன்னார்குடி தாலூகாபோர்டு.

மன்னார்குடி தாலூகா போர்டு பிரசிடெண்டாயிருந்த ஸ்ரீமான் S. கோபாலசாமி முதலியார் அகால மரணமடைந்துவிட்டதினால் ஏற்பட்ட காலிஸ்தானத்தை பூர்த்தி செய்வதற்காக 30—7—28ல் தாலூகா போர்டு மீட்டிங் வைஸ்பிரசிடெண்டு ஸ்ரீமான் K. சீனிவாசராகவய்யங்கார் அக்கிராசனத்தின்கீழ் நடந்தது. காங்கிரஸ் வாதியான மூலங்குடி ஸ்ரீமான் K. கோபாலகிருஷ்ணய்யர் பிரசிடெண்டாக ஏகமனதாய் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்த எலெக்ஷனில் சிறித விநோதமான சம்பவங்கள் நடந்ததாக அறிவிக்கப்படுகிறோம். தாலூகா போர்டுமெம்பர்களில் நாமினேஷன் மெம்பர் ஒருவர் 28—7—28ல் ராஜிநாமா கொடுத்ததாயும் அன்றுதினமே தந்தி மூலமாய் ஸ்ரீமான் T. K. கிருஷ்ணசாமி முதலியார் அதற்கு பதிலாக டிஸ்டிரிக்ட் போர்டு பிரசிடெண்டால் நியமிக்கப்பட்டுவிட்டதாயும் கூறப்படுகிறது. ஆனால் தாலூகா போர்டு பிரசிடெண்டு சார்ஜை வகித்துவரும் வைஸ்பிரசிடெண்டிடம் 30—7—28லதான் ராஜிநாமா கிடைத்ததாம். அன்றையதினம்தான் அவர் அங்கீகரித்திருக்கிறாராம். இதன்மேல் அன்றைய மீட்டிங்குக்கு நியமனமெம்பரென ஸ்தானம் வகிக்கவந்த ஸ்ரீமான் K. T. கிருஷ்ணசாமி முதலியாரை காலிஸ்தானம் ஏற்படுவதற்கு முந்தி நியமித்ததாகச் சொல்வதானது செல்லத்தக்கதில்லையென்று வைஸ்பிரசிடெண்டு கூறிவிட்டார். ஸ்ரீமான் K. சீனிவாசராகவய்யங்கார் ஓர் கிராம உத்தியோகஸ்தரின் குமாரராவார். சாதாரண மத்தியவகுப்பைச் சேர்ந்தவராயிருந்தும் யூனிவர்சிடி பட்டதாரியல்லாமலிருந்தும் மிகுந்த பெரிய மனிதர்களின் தாக்ஷண்யங்களுக்கு சிறிதும் இடங்கொடாமல் சட்டத்தின் கருத்தை நன்கெடுத்துக்கூறி தகுந்த போலீஸ் பந்தோபஸ்துக்கள் ஏற்படுத்திக்கொண்டு எலக்ஷனை நடத்திய விமரிசையை எல்லோரும் பாராட்டுகிறார்கள். மிகவும் கண்ணியம் வாய்ந்தவரும் பாரி மிராசுதாருமான ஸ்ரீமான் முதலியார் அவர்கள் சிறிது மனத்தாங்கல் அடையும்படிநேரிட்டதற்கு வருந்துகிறோம். இனி இந்த தாலூகா போர்டின் நிர்வாகம் மிகவும் சிறப்புற்று விளங்கும்.

நமது ஆதரணைக்கர்த்தர் ஸ்ரீமான் K. S சிவசுப்பிரமணிய ஐயர் M. L. C. அவர்கள் விக்கிரவாண்டியம் பிர்காவில் போட்டியன்னியில் தாலூகாபோர்டு மெம்பராக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

கோமாளபேட்டை ஸ்ரீமான் கிருஷ்ணஸாமி முதலியார் கோட்டூர் பிர்காவில் போட்டியன்னியில் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

# தஞ்சாவூர் ஜில்லா

**கிராம உத்தியோகஸ்தர்கள் சங்கம் ஸ்தாபிக்க 2—9—28ல் விஜயபுரத்தில் மீட்டிங்**

**எல்லா தாலூகா கிராம உத்தியோகஸ்தர்களும் தவருமல் விஜயம் செய்யுங்கள்.**

*சென்னை ராஜதானியிலுள்ள கிராம உத்தியோக சகோதார்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறதாவது.*

சகோதரர்களே! அரசியல் சக்கரம் சுழன்று வருகிறது. கேவலம் என மதித்துள்ள சமூகமும், வகுப்பும் மேல்படியைத்தாண்டி வெகு தூரம் சென்றுவிட்டன. கிராம உத்தியோகஸ்தர்களாகிய நாம்தான் இன்னும் கீழ்ப்படியிலேயே இருந்து மேனோக்கிச் சென்றவர்களைப் பார்த்து கொட்டாவி விட்டுக்கொண்டிருக்கிறோம்.

காரணம் என்ன? நமக்குப் போதியபலம் இல்லை. என் பலம் இல்லை? நமக்கு வேண்டியபலம் இருக்கிறது. அதை நாம் உணர்ந்து கொள்ளவில்லை. பூர்வம் கடலைத்தாண்ட அனுமார் திகைத்து நின்றகாலை, ஜாம்புவந்தன் முதலானவர்கள் அனுமாரின் பலத்தையும் அவருக்கு ஏற்பட்ட வரப்பிரசாதங்களையும் உணர்த்தினதன்மேல் எப்படி மனோதிடனுடன் கடலைப்பாய்ந்து தன் மனோபீஷ்டத்தை நிறைவேற்றிக்கொண்டார். கிராம உத்தியோகஸ்தர்களாகிய நாம் நம் பலத்தையும் கூட்டத்தையும் நாம் மறந்து பேடிகளாய் அரசாங்கத்துறையிலும் கிராம வாழ்விலும் ஒரு சிறிதும் மதிப்பற்று வாழ்ந்துவருகிறோம். இப்பொழுது நமக்குள்ள வல்லமையையும் கூட்டத்தையும் இப்பொழுது பார்டோலியில் அரசாங்கத்தார் செவ்வனே உணர்த்தி நம்மை அரசாங்கமாளிகையின் ஒப்பற்ற அஸ்திவாரம் என்பதை வெளிப்படையாய் காட்டிவிட்டார்கள்.

சகோதரர்களே!

இனி காலந்தாழ்த்தாது ஆங்காங்கு தாலூகா ஜில்லா சங்கங்களை ஸ்தாபித்து எல்லோரும் சங்கத்தின் வாயிலாக நம் மனோபீஷ்டங்களை நிறைவேற்றிக்கொள்ள முன்வாருங்கள். சுதந்தரம் என்னும் சூரியன் உதயமாகப்போகிருன். அடிமை என்னும் இருள் அகன்றோட விழிமின்! எழுமின்! சோம்பலை உதறி ஒற்றுமைஎன்னும் உணர்ச்சியைக்கொண்டு சங்கம் என்னும்வெளியில் உலவுங்கள். அப்பொழுதுதான் நாமும் நாகரீகமுதிர்ந்ததாக எண்ணிக்கொள்ளும் இவ்வாங்கில அரசின் பொறுப்பேற்ற அங்கத்தினர் என்பதை வெளிப்படுத்தி நம் கோரிக்கையை ஈடேற்றிக்கொள்ளலாம். ஒற்றுமையே ஒப்பற்ற வழி. தங்கத்தாலாகாதது சங்கத்தாலாகும் சேர்ந்துவாழ்ந்து சிறப்புறுங்கள். சுபம்! சுபம்! சுபம்!

உண்மை விளம்பி.

---

## நாகப்பட்டணம் தாலூகா கிராம உத்தியோகஸ்தர்கள் சங்கம்.

### விஜயபுரம் மீட்டிங்

5—8—28ல் விஜயபுரத்தில் இந்த ஜில்லாவின் எல்லா தாலூகா கிராம உத்தியோகஸ்தர்களும் விஜயமாகும்படி மித்திரன் மூலமாக இந்தச் சங்கம் செக்ரட்டரி கேட்டுக் கொண்டிருந்தும், ரயில் அசௌகரியத்தை பொருத்தோ சிலரே வந்திருந்தார்கள். எந்த தாலூகாவிலோ எப்போதாவது நினைத்தபடி மீட்டிங் நடத்துவதில் பிரயோஜனமில்லையென்றும், ஜில்லா சங்கத்தை பலப்படுத்தியும் அதற்குத்தகுந்த விதிகள் ஏற்படுத்தியும் மீட்டிங்கூடி ஒருமுகமாக குறைகளை முறையிட்டு பரிகாரம் தேடிக் கொள்ள வேண்டியதே அவசியமாயிருப்பதால் அதற்கு வருகிற செப்டம்பர்மீ 2உ விஜயபுரத்தில் ஜில்லாசங்கம் கூடுவதற்கு துண்டு பிரசுரங்கள் கொடுத்தும் எல்லா தாலூகாவுக்கும்போய் பிரசாரம் செய்கிறதென்றும் அந்தச் சிலவை இந்தச்சங்கமே செலவிடுவதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

---

## 'சுதந்தரன்'

பர்மாவில்
தேசத்தொண்டில் முன்னணியில்
நின்றுலவும்
சிறந்த தேசீய செந்தமிழ் வாரப் பத்திரிகை.

| | | |
|---|---|---|
| வருட சந்தா | ரு. | 5—0—0 |
| ஆறுமாத சந்தா | ரு. | 2—8—0 |

ஆசிரியர்:—
ஸ்ரீமான் சு. நா. சுந்தர முதலியார்.

இந்திய இரத்தம் ஓடும்
ஒவ்வொரு இந்தியரும் இதை
ஆதரித்தல் அவசியமாகும்.

மானேஜர்,
"சுதந்தரன்" காரியாலயம்,
39—37-வது வீதி இரங்கோன்.



# கிராம புனருத்தாரணம்.

## செங்கற்பட்டு ஜில்லா போர்டின் வேலை.

(ஸ்ரீமான் எம். கிருஷ்ணசாமி ரெட்டியார், செங்கற்பட்டு ஜில்லா போர்டு தலைவர்.)

செங்கற்பட்டு ஜில்லா போர்டு 1927ம் வருஷ ஆரம்பத்தில் மூன்று கிராமங்களைப் பொறுக்கியெடுத்துக்கொண்டு புனருத்தாரண வேலையை ஆரம்பித்தது. சைதாப்பேட்டை தாலூகாவுக்கு வில்லிவாக்கத்திலும், செங்கற்பட்டு தாலூகாவுக்காக உத்திரமேரூரிலும், திருவள்ளூர் தாலூகாவுக்காக கன்னிகைப்பேரிலும் புனருத்தாரண வேலை துவக்கப்பட்டது.

கிராம பஞ்சாயத்துக்கள் நியமித்தல். வைத்திய வசதி, குடி தண்ணீர் வசதி முதலியன அளித்தல் முதலிய வேலைகளும் புனருத்தாரணத் திட்டத்தில் அடங்கியிருக்கின்றன. விவசாய இலாகா, கூட்டுறவு இலாகா, சுகாதார இலாகா முதலியவைகள் ஐக்கியமாக வேலைசெய்யவும் ஏற்பாடுசெய்யப்பட்டன. இந்த வேலைகளைக்கவனிக்க 60 ரூபாய் சம்பளத்திலும் 25 ரூபாய் படியிலும் மூன்று சூபர்வைசர்களும் 12 ரூபாய் சம்பளத்தில் மூன்றுபியூன்களும் 60 ரூபாய் சம்பளத்திலும் 25 ரூபாய் படியிலும் ஒரு லோகல்பண்டு ஓவர்சியரும் 12 ரூபாய்சம்பளத்தில் ஒரு பியூனும் 40 ரூபாய் சம்பளத்தில் மூன்று ஆயுர்வேத வைத்தியர்களும் 12 ரூபாய் சம்பளத்தில் மூன்று பியூன்களும் 35 ரூபாய் சம்பளத்திலும் 5 ரூபாய் படியிலும் மூன்று சீனியர் மருத்துவச்சிகளும் 30 ரூபாய் சம்பளத்திலும் 5 ரூபாய் படியிலும் மூன்று ஜூனியர் மருத்துவச்சிகளும் சிப்பந்திகளாக நியமிக்கப்பட்டனர்.

கிராம ஜனங்களிடையே பிரசாரம் செய்வதற்கு திறமை வாய்ந்தவர்களே சூபர்வைசர்களாக நியமிக்கப்பட்டனர். இவர்களில் ஒருவர் பி எ பட்டதாரி. மற்றொருவர் விவசாய பட்டம் பெற்றவர். இன்னொருவர் கூட்டுறவு இயக்கத்தில் நல்லஅனுபவமுடையவர். ஆயுர்வேத வைத்தியர்கள் திருவனந்தபுரம் ஆயுர்வேதகலாசாலையில் பட்டம்பெற்றவர்கள்.

64 கிராமங்களில் பஞ்சாயத்துக்கோர்ட்டுகள் நியமிக்க அநுமதி பெற்றுக்கொள்ளப்பட்டது. 45பஞ்சாயத்து சபைகளுக்கு அங்கத்தினர்களும் தெரிந்தெடுக்கப்பட்டுவிட்டனர். 44 சபைகளில் தலைவர் தேர்தலும் நடத்தப்பட்டுவிட்டது. வில்லிவாக்கம் பிர்காவுக்காக மத்திய பஞ்சாயத்துச் சங்கம் அமைக்கப்பட்டது. இவைகளில் 12 பஞ்சாயத்துக்கள் தலைக்கட்டுவரி, கிராம ஆயக்கட்டுவரி, வீட்டுவரி முதலியன விதிக்கயோசித்திருக்கின்றன. பஞ்சாயத்து ரிஜிஸ்டிரார் ஜெனரலின் அநுமதிதான் வேண்டும்.

பிர்க்காவுக்கு ஒருவாராக மூன்று வைத்தியர்களும் மூன்று பிர்காக்களிலும் ஆயுர்வேத வைத்தியசாலைகள் அமைத்துக்கொண்டு வேலைசெய்து வருகின்றனர். 400 ரூபாய்க்கு மருந்து வாங்கி கொடுக்கப்பட்டிருக்கிறது. நாளைக்கு சராசரி 25 பேர் வைத்தியசாலைக்கு வந்து சிகிச்சை பெறுகின்றனர். 5 மாதங்களில் 10940 பேர்களுக்குச் சிகிச்சை செய்யப்பட்டிருக்கிறது. வைத்தியர்கள் விஷயத்தில் கிராம ஜனங்கள் மிக்க அன்பு காட்டுகின்றனர். கிராமவாசிகள் அவர்களின் ஊழியத்தைப் பெரிதும் பாராட்டுகிறார்கள். மருத்துவச்சிகள் கிராமங் கிராமமாகச்சென்று கர்ப்ப ஸ்திரீகளைக் கவனித்துவருவதோடு, குழந்தைகளுக்கு வரும் நோய்களுக்கும் சிகிச்சைசெய்து வருகின்றனர். அவர்கள் கிராம ஸ்திரீகளின் பழைய குருட்டுவழக்கங்களை ஒழிக்க வேலைசெய்யவேண்டியிருக்கிறது. அதோடு கிராம

மருத்துவச்சியின் இரக்கமற்ற தன்மையைக்கண்டு அவர்களுடன் சமாளிக்கவேண்டியிருக்கிறது. 74 பேருக்கு அவர்கள் இதுவரை மருத்துவம் பார்த்திருக்கின்றனர். கிராமப்பெண்கள் இப்போதுதான் இவர்களிடம் நம்பிக்கைவைக்க ஆரம்பித்திருக்கின்றனர். கிராமாஸ்தாக்களேயும் வண்டிப்பாதையையும் சீர்ப்படுத்த 62420 ரூபாய் சாங்கிஷன் செய்யப்பட்டிருக்கிறது. இதில் கவர்ன்மெண்டு உதவியுடன் ஜில்லா போர்டு கால்பாகச்செலவை ஏற்றுக்கொள்ளும். கிராம பஞ்சாயத்துக்கள்மூலம் மற்றொரு கால்பாகம் சேர்ந்துவிடும். கிராமக்குளங்களை குடிதண்ணீர் எடுப்பதற்காகமட்டும் உபயோகப்படும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இம்மாதிரி 16 குளங்கள் ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கின்றன. கிராமப் பஞ்சாயத்துகள் இதற்குக் கட்டுத்திட்டங்கள் ஏற்படுத்தியிருக்கின்றன. 5 குளங்களைத் தூர்வாரி சுத்தம் செய்யவும் 19 கிணறுகள் புதிதாக எடுக்கவும் செலவு சாங்கிஷன் செய்யப்பட்டிருக்கிறது.

கூட்டுறவு இலாகா, மிருகவைத்திய இலாகா, சுகாதார இலாகா முதலியவைகள் இந்த கிராம புனருத்தாரணத் திட்டசம்பந்தமாக விசேஷ உதவி அளித்து வருகின்றன. நான்கு பொலிகாளைகள் வாங்கிவிடப்பட்டிருக்கின்றன. கன்னிகைப்பேறு பிர்க்காவில் கூட்டுறவு சூபர்வைவலிங் யூனியன் ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. உத்திரன் மேரூர் பிர்க்காவில் கிரடிட்ச் சங்கங்கள் இரண்டு ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கின்றன. வில்லிவாக்கம் பிர்க்காவில் கட்டிட சங்கம் ஒன்றும், நெசவுக்காரர்கள் சங்கம் ஒன்றும் ஸ்தாபிக்க உத்தேசமிருக்கிறது.

மிருகவைத்தியர்கள் ஆங்காங்குசென்று உதவி செய்துவருகின்றனர். சுகாதாரஇலாகா கண்ணாடிப் படங்கள் மூலமாக கிராமங்களில் விசேஷ பிரசாரம் செய்து வருகிறது. விவசாய இலாகாமட்டும் சற்று அசிரத்தை காட்டிவருகிறது. அப்படியிருந்தும் கிராமவாசிகளை செயற்கை எருவாங்கும்படியும் கொங்கணதேச கலப்பைகள் வாங்கும்படியும் தூண்டப்பட்டு வருகிறது. 17 கலப்பைகளும் வாங்கப்பட்டன. விவசாய இலாகா சற்று சிரத்தை காட்டினால் இன்னும் விசேஷ நன்மை ஏற்படலாம்.

பஞ்சாயத்து சபைகள் ஆரம்பப்பாடசாலைகளை மேற்பார்வை பார்ப்பதிலும் புத்தகசாலைகள் ஏற்படுத்துவதிலும் முனைந்திருக்கின்றன. சினிமாபடங்கள் மூலம் மலேரியாவைத்தடுப்பதற்கான வழி முதலியவைகள் கிராமவாசிகளுக்கு விளக்கப்பட்டு வருகின்றன. விவசாயிகளுக்கு கோழிப்பண்ணை வைத்து ஜீவிப்பதற்கான வழிகளும் காட்டப்படுகின்றன. கொக்கிப்புழு வியாதியைத்தடுக்க மும்முரமான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இதற்காக 3000 ரூ ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது.

20 கிராமங்களின் பொருளாதார நிலை இன்னதென கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. ஜில்லா போர்டு இந்தப் புதியவேலையைப் பரீக்ஷார்த்தமாக எடுத்துக்கொண்டு தக்க அநுபவம் பெற தீவிரமுயற்சி செய்துவருகிறது.

ஒரு வருஷம் செய்தவேலையினால் ஏற்பட்டுள்ள அநுபவத்தால் இத்திட்டத்தை ஜில்லாவெங்கும் அநுஷ்டானத்துக்குக் கொண்டுவரலாமென யோசிக்க ஒரு தைரியம் ஏற்பட்டிருக்கிறது.

இதற்காக கிராம அபிவிருத்தி சபை ஒன்றை ஸ்தாபிக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. சிசு சம்ரக்ஷண சாலைகள் ஏற்படுத்தும் புதியவேலை இச் சபையின் திட்டத்தில் சேர்க்கப்படும். கிராமகெஜட் ஒன்றும் பிரசுரிக்கப்படும். ஜில்லாவில் முக்கிய இடங்களில் சிசு சம்ரட்சண சாலைகள் ஏற்படுத்த சம்பளமில்லாமல் ஒரு ஸ்திரீ பிரசாரகர் நியமிக்கப்படுவார். சூபர்வைசர்களிடம் கலப்பைகளும், விதையும், எருவும் மொத்தமாகக்கொடுத்து பிரசாரத்துக்கும் விற்பனைக்கும் உபயோகிக்கச் சொல்லவும் உத்தேசமிருக்கிறது. கிராம ஆசிரியர்களைப்பயிற்சிவிக்கத் தனியாக ஒரு பாடசாலைவைக்கவும் ஏற்பாடு நடந்து வருகிறது. இதில் விவசாயம், கூட்டுறவு, பஞ்சாயத்து ஸ்தாபனம், சாணிவேலை, வைத்தியம் முதலியவை கற்பிக்கப்படும். இதில் பயிற்சி பெறுவோர் இனை அபிவிருத்திவேலையில் முனைந்திருப்பதற்காக அவர்களுக்குச் சன்மானங்கள் அளிக்கப்படும். காலக்கிரமத்தில் இவர்களே சூபர்வைசர் வேலைகளை எடுத்துக்கொண்டு செய்யத்தக்க நிலைமை ஏற்படும்.

ச—மி.



# மேட்டூர் திட்டம்.

## தஞ்சை ஜில்லா மிராசுதார்களுக்கு பகிரங்கக் கடிதம்.

(ஸ்ரீமான் என். திருவேங்கடத்தய்யங்கார் B.A. B.L., F.M.U. கும்பகோணம்,)

முன்னர் ஒரு கடிதத்தை நான் எழுதியதின் பேரில், பிரான்பகதூர் ஆரோக்கியசாமி முதலியார் எழுதிய வியாசத்தையும், அதைப்பற்றி ஹிந்துபத்திரிகையில் எழுதப்பட்டக் குறிப்பையும் நான் படித்தேன். ஹிந்துப்பத்திரிகையும், ஸ்ரீமான் ஆரோக்கியசாமி முதலியாரும் மேட்டூர் திட்டம் பழைய டெல்டா நிலங்களைப் பாதுகாப்பதற்காக அமையப் பெற்றிருக்கிறது என்று ஒப்புக்கொண்டிருப்பதைக் கவனிக்கசந்தோஷம்.

(2) மடைகள், ஆறுகள், வாய்க்கால்கள் யாவற்றையும் திருத்தியமைக்கவேண்டிய அவசியத்தையும், வடிவாய்க்கால்களினால் பாய்ச்சப்பெறும் நிலங்களுக்கு நேராகத் தண்ணீர் வருவதற்கு வழி ஏற்படுத்தவேண்டியதையும், அவர்சரியாக எடுத்துக் கூறியிருக்கின்றார். காவேரிக்கமிட்டி ரிபோர்ட்டில் இவ் விஷயங்கள் தீர ஆலோசிக்கப்பட்டிருக்கின்றன. இவ் வேலைகளைச் செய்யவேண்டியது பல காரணங்களாலும் அவசியமென்றும், வாய்க்கால்களில் சிறமப்படாமல் தண்ணீர் ஏறவும் வீணாகாமல் போதிய அளவு தண்ணீர் செட்டாகப்பாயவும் இவ்வேலைகளை முதலில் கவனிக்கவேண்டுமென்றும் டெல்டா இஞ்ஜனியர் ஸ்ரீமான் நீலகண்டய்யர் வற்புறுத்தியிருக்கிறார். வெள்ளப்பிரவாகம் ஏற்பட்டுவிட்டால் கல்லணைக்கப்பால் அப்பிரவாகத்தைத் திறந்துவிடக் கூடாதென்றும் நீர்ப்பாசனத்திற்காக மாத்திரம் இவை உபயோகப்பட வேண்டுமென்றும் அவர் கூறியிருக்கிறார். இதுவரை விறைக்கு 15,0000 மதிப்பளவுத் தண்ணீர்சென்ற இப் பாசனவாய்க்கால் நதிகளில் இனிமேல் விநாடிக்கு 80,000 மதிப்பளவு தண்ணீர் தான் போறுமென்று அவர் கூறி, அந்த ஆற்றங்கரைகளைக் குறுக்கவேண்டிய அவசியத்தை எடுத்துரைத்திருக்கிறார். மடைகளை மாற்றியமைக்க வேண்டுமென்று பிரதம இஞ்ஜினியர் கூறிய யோஜனையை கவர்மெண்டார் அங்கீகரித்திருப்பதாக சில நாட்களுக்குமுன்பு நான் ஹிந்துப் பத்திரிகையில் படித்தேன் இந்த யோஜனை எவ்வழியில் அநுஷ்டானத்திற்குக் கொண்டுவரப்படுமோ நாமறியோம். அடிப்பக்கத்திலிருந்து இதைச் செய்யவேண்டுமென்று அவர்கள் விரும்புகிறார்கள். இது சரியில்லையென்பது என்னபிப்பிராயம். அடிப்பக்கத்தில்தான் கஷ்டமதிகமானதையால், மேல்பாகங்களில்தான் சிக்கனம் அவசியம். கீழ்ப்பக்கத்தை திருத்தியமைப்பதென்றால் அங்கிருப்பவர்களுக்கதிக பஞ்சமும் அவஸ்தையும் ஏற்படும் தவிரவும் பணம் கிடைப்பதாயிருந்தால்தான் அந்த ஏற்பாடுகளை கவர்ன்மெண்டு செய்யப்போகிறார்களாம். அவசியமான சீர்திருத்தங்கள் செய்யவேண்டியிருக்கையில் அதனால் வரும்படி ஏற்படுமோவென்பதை கவர்ன்மெண்டார் கவனிக்கக்கூடாது. மடைவாய்களும், ஆறுகளையும் திருத்தியமைக்காவிடில் திட்டத்தின் தண்ணீர் அதிகமாகவீணாகும். திருத்தகருப்பூண்டிதாலூகாவில் அதிகத்தண்ணீரைமிகுந்து விரிவாகஉபயோகிக்கலாம். கண்ணம்பாடி மேட்டூர் மத்யஸ்தரினால் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் அளவில் ஒருசதுர அங்குல மதிகரிக்கச்செய்ய முடியாது. ஆகையினால் பழைய டெல்டாவில் தண்ணீரைமீத்து மேட்டூர் திட்டஎல்லையில் உள்ள பழைய டெல்டாவிற்கதிகத் தண்ணீர் விடவேண்டிவரும். ஆதலினால் வடிவாய்க்கால் சீர்திருத்தப்பட்டால்தான் அதன் செலவு கைக்குக் கிடைக்கும்.

3. ஸ்ரீமான் நீலகண்டய்யர் சொல்லியுள்ளவாறு வடிவாய்க்கால்களாகிய பழவாறு, மண்ணியாறுகளுக்கு நேராக ஆற்றுத்தண்ணீரைவிட வழி ஏற்படுத்தாமல் என்ன சீர்திருத்தம்செய்தாலும் ஒருபிரயோஜனமும் ஆதாயமும் ஏற்படாது.

4. மேற்கூறியுள்ள கஷ்டங்களை நிவர்த்தித்து அவசியமான வேலைகளைச்செய்து கொடுக்காமல் (2) (3)ம்தர நிலங்களை முதல்தர நிலமாக்கி வரியை உயர்த்துவது கூடாது. இந்த ஜில்லாவில் ஏற்கெனவே வரி உயர்வாயிருக்கிறது. இச்சமயத்தில் மேட்டூர் திட்டமென்ற பெயரைக்கொண்டு ஒருவித அபிவிருத்தியும், சீர்திருத்தமும் செய்யாமல் வரியை உயர்த்துவது கூடாது. நிலங்களை வரி உயர்த்தல் முதலிய விஷயமாய்க் கலெக்டர் யோஜனைசெய்து வருவதாகக் கூறப்படுகிறது. தண்ணீர் தட்டாமலும், காலா காலத்தில் கிடைப்பதற்கும் வழிசெய்தபிறகே நிலத்தின் தரத்தை மாற்றயோஜனை செய்யவேண்டும். இது சம்பந்தமாகச்செய்யப்படும் யாவும்

ஜனங்களின் இஷ்டத்தைக்கேட்டே மேல் நடத்தப்படவேண்டும்.

5 இருபோகம் பயிரிடுவதைப்பற்றி டெல்டா நிலங்களில் ஒரு சங்கடமிருக்கிறது. இதர பாகங்களைப்போல் இங்கு திடமான இருபருவங்களில்லை. ஜூன் 15 முதல் ஜனவரி 15க்குள் கிடைக்கும், அரைகுறை மழையையும் ஆற்றுத் தண்ணீரையும் கொண்டு நாங்களிருபோகம் நெல் பயிரிடுகிறோம். வடகிழக்குக்காற்று சரியாக வீசாமல் பருவமழை தவறிவிட்டால் அப்பருவமும் பயிரிடப்பிரயோஜனமில்லாமல் போய்விடுகிறது. தென்மேற்கு காற்றினால் கிடைக்கும் பருவமழையைக்கொண்டு ஒருபோகம்தான் பயிரிடமுடிகின்றது. முதற்போகத்திற்கவசியமான தண்ணீர் சீக்கிரம் கிடைத்துவிட்டால் வடகிழக்கு பருவமழை தவறிவிட்டால ஏரியிலிருந்து இரண்டாம்போகத்திற்குத் தண்ணீர் விடும்பட்சத்தில் டெல்டாவில் இருபோகமும் செழுமையாகப் பயிரிடலாம்.

இரண்டாம்போகம் பயிரிடுவதென்றால் தண்ணீர் சரியாகக்கிடைப்பது மாத்திரமல்லது போதுமான வேலையாட்களும் அவசியமென்பதையும் அறிந்துகொள்ளவேண்டும். பட்டுக்கோட்டை நிலங்களிலும் நன்செய் பயிரிட ஆரம்பித்துவிட்டால், வெண்ணாற்றுப் பாசனக் கட்டாரம்பத்திலிருப்பவர்கள் வேலைக்ககப்படமாட்டார்கள். ஸிலோனுக்குச்செல்லும் கூலிகளைத்தடுக்கவேண்டிய அவசியமும் ஏற்படும். ஸிலோனில் நம் கூலிகளுக்கதிகமாகச் சம்பளமோ சௌகரியமோ ஏற்படவில்லையாகையால் அவர்களை அங்கு செல்லாமற்றடுப்பதில் பிசகே இல்லை.

6. நிலங்களுக்கேற்ற எருவும் அவசியம். இப்பொழுது எருக்களும் தழைகளும் கிடைப்பதில்லை. அவை கிடைத்தாலல்லது நிலங்களில் இருபோகம் பயிரிடவேண்டுமென்று கட்டாயப்படுத்துவது கூடாது. போதிய எருவும் தகுந்த ஆட்களும் இல்லாமல் இருபோகம் சாத்தியமாகாது.

7. மற்றுமோர் விஷயத்தை இச்சமயத்தில் கவனிக்கவேண்டும். ஸிலோனுக்கு முன்னர் தஞ்சாவூரிலிருந்து அரிசி போய்க்கொண்டிருந்தது. இப்பொழுது பர்மாவிலிருந்து அங்கு அரிசி போகிறபடியால் தஞ்சாவூர் அரிசிக்கு கிராக்கி ஏற்படவில்லை. தற்சமயம் நாமோ வெளிதேசங்களிலிருந்து சர்க்கரை ஏராளமாக இறக்குமதி செய்கிறோம். மேட்டூர் ஏரியில் 82,000 பத்துலக்ஷ கன அடி தண்ணீர் தேங்குவது கூடாதென்றும் 20,000 பத்துலக்ஷ கன அடியாகக் குறைக்க வேண்டுமென்றும் கூறி இருக்கிறார். இவ்விதம் அதிகமாகவிருக்கும் தண்ணீரைக்கொண்டு கரும்பு பயிரிடலாமென்று எனக்குத் தோன்றுகிறது. இந்த யோஜனைப் பிரகாரம் செய்யலாமா என்பதை விவசாய இலாகா கவனிக்க வேண்டும். இருபோகம் பயிரிடும் சிரமத்தையும் லாபத்தையும் காட்டிலும் கரும்புப் பயிரில் அதிக லாபமும் சிரமக் குறைவுமிருக்கலாம். இங்கு ஒரு சமயம் ஏராளமாகக் கரும்பு பயிரிடப்பட்டதென்பதை ஞாபகமூட்ட விரும்புகிறேன்.

8 மராமத்திலாகாவில் அடிக்கடி உத்தியோகஸ்தர்களை மாற்றுவதனால் நீடித்த கொள்கையொன்றும் பின்பற்றுவதில்லை. ஆகையால், அவ்வழக்கம் ஓய வேண்டும்.

9 கட்டளை யணைக்கட்டு விஷயமாக திருச்சி மிராசுதார்களுக்குப் பெரும் குறையிருப்பதை நிவர்த்திக்க வேண்டிய தவசியமே. தஞ்சாவூர் ஜில்லாக் கள்ளர் பிரதேசங்களுக்கும் கட்டளை யணையபிவிருத்தி மூலமாக உய்யக்கொண்டான் பாய்ச்சலை திருப்பி யளிக்க வேண்டுவதும் அவசியமே. இம்முக்கிய ஏற்பாடுகளைச் செய்வதிலும், பழைய டெல்டா பிரதேசங்களுக்கு இடையூறு நேரா வண்ணம் கவனித்துக் கொள்ள வேண்டும்.

10 தஞ்சை திருச்சி வாய்க்கால் பாசனங்களபிவிருத்தி சீர்திருத்தங்களை ஒரே சூபிரண்டெண்டிங் இஞ்சினீயரிடம் விட்டு வைத்தால் இவ்விரு ஜில்லா வாசிகளுக்கும் ஒத்த சௌகரியமான வசதிகளைச் செய்து கொடுப்பதில் சிரம மிராது. மராமத்திலாகா மேலதிகாரியும், திருச்சி ஜில்லாப் பிரதிநிதியுமாகிய கனம் மந்திரி இதற்கானதைச் செய்யுமாறு திருச்சி வாசிகள் செய்வாரென்றே நான் நம்புகிறேன்.

11. ஸ்ரீமான் மருதவனம் பிள்ளையும், கனம் முத்தையா முதலியாரும் சட்டசபையில் இவற்றைப் பிரஸ்தாபித்து வேண்டிய சீர்திருத்தம் செய்யாமலும் ஜில்லா வாசிகளைக் கேட்காமலும் நிலங்களை நன்செய் யாகவும் இருபோக நிலமாகவும் முதல்தரவரி நிலமாகவும் பிரிப்பதில்லை யென்று கவர்ன்மெண்டார் வாக்குறுதி யளிக்கச் செய்வார்களென்று நம்புகிறேன். மண்ணியாறு பழவாறுகளுக்கு ஆற்று ஜலம் நேராக பாயவும் ஏற்பாடு செய்வதுடன், திருத்துறைப்பூண்டி, சீர்காழித் தாலுக்காக்களுக் கவசியமான மாறுபாடுகளைச் செய்யுமாறும் வற்புறுத்த வேண்டும்.

பெரிய மிராசுதார்கள் விழித்தெழுந்து சங்கங்களைப் பலப்படுத்திக் கொண்டு தங்கள் குறைகளை நிவர்த்திப் பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய முன்வரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



# பண்டைத் தமிழரின் மேம்பாடு.

[ஸ்ரீமான் ஊ. சா. வேங்கடராம ஐயர் எழுதியது.]

(124-வது பக்கம் தொடர்ச்சி)

## ஒழுக்கம்.

கல்வி அறிவுகளான் மேம்பட்டிருந்த தமிழர் அவற்றின் பயனாகிய ஒழுக்கத்திலும் தலை சிறந்து விளங்கி வந்தனர். ஒழுக்கம் உயிரினும் சிறந்ததாகக் கருதப்படுவது. அஃதொன்றே உயர் குலத்தினர் என்ற பெருமையைத் தருவது என்பதும் அவர்களது கருத்தாகும். உள்ளும் புறமும் ஒத்த பரிசுத்தமான தன்மையே சீரிய ஒழுக்கமாகும். அழுக்காறு, அவா, வெகுளி ஆகிய தீக்குணங்களினின்றும் விலகி நின்றவர்களே நல்லொழுக்க சீலர்களாக மதிக்கப்பட்டு வந்தார்கள். அங்ஙனமே பொய்பேசுதல் கடுஞ்சொற்களைக்கூறுதல் முதலிய குற்றங்களினின்றும் நீங்கி உண்மை பேசுதல், இன்சொற்களைக் கூறுதல் ஆதியவற்றை மேற்கொண்டொழுகுபவர்களே மேலோராக முன் நிற்கும் பெருமையினைப் பெற்றுத் திகழ்வார்கள். மனம், வாக்கு, காயம் ஆகிய முக்கரணங்களாலும் ஒருபடித்தாக உண்மையாக ஒழுகுபவரே உயரிய நல்லொழுக்க சீலராகக் கருதப்பட்டனர் என்பதற்குப் பல சான்றுகள் தமிழகத்தில் உண்டு. எல்லாப்படியாலும் நல்லனவற்றைச் செய்வதையே நல்லொழுக்கமாகக்கொண்ட தண்டமிழ்ச் சான்றோர் அங்ஙனம் ஒழுகச் சக்தியற்றவர்களையும் விட்டுவிடவில்லை. அவர்களுக்கும் இயன்றதொரு நல்வழியைக் காட்டியுள்ளார். (மக்களாய்ப் பிறந்தார் இயன்றவளவு நன்மையினையே செய்துவரல் வேண்டும். அங்ஙனம் நன்மையினைச் செய்யச் சக்தியின்றேல் தீமையினையேனும் செய்யாதிருப்பாராக. அஃது ஒன்றிருப்பின் எத்தகைத் தீமைகளும் அணுகமாட்டா. அனைத்தும் நன்மையாகவே முடியும். அன்றியும் அதுவே நல்லொழுக்கமும் ஆகும்) என்பர் 'ஒன்றே செய்யவேண்டும். அந்த ஒன்றையும் நல்லதாகவே செய்ய வேண்டும். நன்றினையும் இன்றே செய்ய வேண்டும் இன்றைக்கும் இன்னே இப்பொழுதே செய்ய வேண்டும்' என்ற கொள்கையே நிலைத்திருந்ததென்பது தவறாகாது. அன்றியும் 'தாம் கெட்டாலும் தக்கார் பிறருக்குக் கெடுதலை எண்ணுதல் கூடாது. தமது உடம்பின் ஊன் கெட்டாலும் உண்ணத்தகாதவர் கையில் உண்ணலாகாது. இவ்வுலகம் முழுவதும் ஒரு குடையின்கீழ் ஆளும் பெரும் பேறு கிடைப்பதாயினும் பொய் கலந்த சொல்லைச் சொல்லுதல் கூடாது' என்றுரைக்கும் நாலடி. தமது நிலைமையாகிய ஒழுக்கத்தினின்றும் நழுவியவர் 'தலையின் இழிந்த மயிர்'போலத் தாழ்ந்தவராகக் கருதப்பட்டு வந்தனர். ஒழுக்கமே உயிர் உயிரே ஒழுக்கம்.

## பழக்கம்.

இங்ஙனம் சிறப்புற வாழ்ந்த தமிழர்கள் தங்களது பழக்கத்தாலும் சிறந்து விளங்கி வந்தார்கள் யாண்டும் அவர்கள் விரும்பி யேற்றுக் கொள்வது நல்லாருடன் பழகுவதையே. 'கல்லாமல் வீணே ஒருநாளும் போதல் கூடாது. அறிவு ஆற்றல்களால் நிரம்பிய பெரியோர்களிடம் சென்று வழிபடாத நாட்கள் இருத்தல் கூடாது. இயன்ற அளவு கொடாத நாளும் இருத்தல் கூடாது' என்னும் நாலடி. இவை எத்துணைச் சிறந்த பழக்கத்தை அறிவிக்கின்றன? இவ்வளவேயோ? இன்னும் இவர்களது பழக்கம் மிக மேம்பட்டிருந்தது. ஒருவனுக்குத் தேவதூதன் ஓர் இரதத்தைக் கொண்டுவந்து நிறுத்திக்கொண்டு அவனைப் பார்த்து "ஐயா, உங்களை எங்களது தலைவர் அழைத்து வருமாறு என்னை ஏவியுள்ளார். தங்களை அழைத்துச் செல்லத் தேரும் வந்துளது. தயை செய்தெழுந்தருளுவீராக" என்று கூறுகின்றான். அக்கால், அவன் அந்தத் தேவதூதனைப் பார்த்து "ஐயரே, நான் இப்பொழுது குற்றமற்ற கேள்வியினையுடைய அறிவு நிறைந்த பெரியோர்களுடன் அளவளாவி இன்பத்தினை அனுபவித்துக் கொண்டிருக்கின்றேன். அத்தகைய எனக்கு நீவிர் அழைக்கின்ற தேவலோகத்தில் உள்ள இன்பம் மேலானதாகத் தோற்றவில்லை நான் இப்பொழுது அனுபவிக்கும் இன்பத்திலும் மேம்பட்டதாக நீர் கூறும் தேவலோக இன்பம் இருக்குமென எனக்குத் தோன்றினால் அக்கால் நான் உம்மை அழைக்கின்றேன். அப்பொழுது தேர் கொண்டுவரலாம். இப்பொழுது எனக்கு அங்கே வேலை இல்லை. நீர் போகலாம்" என்று கூறி அனுப்புகின்றான். இஃதொரு

அதனுல் இத்தகைய கூட்டுறவு மளிகைகளிற் சேரு கின்றவர்கள் பிற கடைகளில் வியாபாரம் செய்வதிலி ருக்கும் கெடுதல்களைக் கண்டுபிடித்தவுடன் அவற் றிற்கு ஒரு பரிகாரம் உண்டு என்பதையும் கண்டு பிடித்துக் கூட்டுறவு முறையில் நம்பிக்கை வைத்தல் வேண்டும். இதனுல் கடைக்காரர்களிடத்தில் நாம் வெறுப்பை யுண்டுபண்ணுவதாக எவரும் கருதக் கொள்ளலாகாது. அவர்களிடத்தில் நமக்கு எத்த கைய வெறுப்புமில்லை; அதிருப்தியுமில்லை. ஆனுல் அந்த வியாபாரத்தின் முறை பிசகானது என்பதும், அதனுல் சாமான் வாங்குகிறவர்களுக்கும் பொது ஜனங்களுக்கும் எத்தகைய நன்மையையும் உண் டாக்க முடியாது என்பதும் மறுக்க முடியாத உண்மையே.

கூட்டுறவுமளிகையில் நடைபெறும்முறை நியா யமான உயர்ந்த பலகொள்கைகளை அஸ்திபாரமாகக் கொண்டது, அஃது எல்லாருக்கும் தெளிவாக விள ங்கக்கூடியது; எவரும் அதனை நம்பலாம்; அதைச் சரியாக உபயோகித்து வந்தால் 'ஐக்கியத்தினுல் வரக்கூடியன' என்று பொது ஜனங்கள் நம்பும் எல்லா நன்மைகளும் தவறாது வந்தடையும். ஆனுல், 'ஓசிரவிலேயே எல்லோரும் பணக்காரர்களாகத்தக்க கண்கட்டு வித்தை அல்ல' என்பது அறியத்தக்கது.

பலர் சேர்ந்து சாமான்களை வாங்குவதில் மிக மேலானவும், சிறிதும் துன்பமின்றிப் பொருளை மிகுத்துத் தரத்தக்கனவுமாகிய பல நோக்கங்கள் உதிக்கின்றன. அந்த நோக்கங்களை உண்மையாயும், சுறுசுறுப்பாயும் நமது கோட்பாடுகளை நாம் வியாபார முறையிலே பிரயோகம் செய்வதால்தான் அடைய முடியும். கூட்டுறவு முறையிலே பொது ஜனங்கள் ஒன்றுகூடிச் செய்யும் 'பொது ஜன வியாபாரமாகிய கூட்டுறவு மளிகை' என்பது குடி யரசு போன்ற பெருத்த ஒரு காரியமாகும். ஆனுல் அதிற் பயனடையக் காவலும் விடாமுயற்சியும் வேண்டும்.

எழுமின் மாந்தர்காள் எழுமின் எழுமின்
உழைமின் உழைமின் ஓயா துழைமின்
பெறுமின் சுதந்தரம் பெறுமின் பெறுமினே.

சுபம்.

கவனியுங்கள் ! போலிச்சரக்குகளை வாங்கி ஏமாறுதீர்கள் !!

தென்னிந்தியா நெசவுசாலை,
கும்பகோணம்.

பலவிதமான டவல்கள், ஷர்ட்டிங் பீஸ்கள், தோத்தி வகையறுக்கள் ஷை நெசவு சாலையில் தயாராகின்றன. மேற்கண்ட S. R. S. டிரேட் மார்க் குள்ள சரக்குகளையே கவனித்து வாங்குங்கள். நாணயத்திற்கும் உறுதிக்கும் உத்தரவாதமுள்ளதாயிருக்கும். டிரேட் மார்க்கில்லாத சரக்குகளை வியாபாரிகள், S. R. S. டவல் என்று சொன்னுல் நம்பி மோசம்போகாதீர்கள். ஷை நெசவுசாலையிலேயே கதர் வேஷ்டிகளும் கதர் துண்டுகளும், கதர்சட்டை பீஸ் தினுசுகளும் தயாராகின்றன.

S. R. சுந்தரமய்யர், புரோப்ரைட்டர்.



# ராணுபிரதாபசிம்மன்.

அல்லது

## "ரஜபுத்திர தேச பக்தி."

(ஸ்ரீமான் S. மஹாலிங்க சர்மா சிறைவாசத்தில் எழுதியது.)

[All Rights Reserved]

(122-வது பக்கம் தொடர்ச்சி)

### ஆறாவது அத்தியாயம்.

"ஆரமு மாரச்சேறு மரும்பனி நீரும் பூவு
மீரவெண்மதி நிலாவு மிதம்பெறு தென்றற்சாறு
மொருயிரிரண்டு மெய்யா யுருகுவா ருருகும்வண்ண
மாரனை மகுடஞ் சூட்ட வந்தது வசந்தகாலம்"

என்று வில்லிப்புத்தூர் ஆழ்வார் தமது அழகிய சொல்நாமங்களை புகுத்தி எழுதிய விருத்தப்பாவில் கூறிய படி, மலர்க்கணை பூட்டி மாந்தரை மயக்கும் மாண்புடைய வில்லோனுகிய மன்மதன், மகுடம் சூடிக்களிக்கும் கால மாகிய வசந்தம் வந்தது. உலகிலுள்ள ஜீவராசிகளெல்லாம் தத்தமக்குரிய குறைகளையும் கஷ்டங்களையும் சற்றே மறந்து, களிப்பதற்குரிய காலமும் அதுவே!

மேலும் அக்காலத்தில் தான் பனிநீர் சோலையெல் லாம் நன்மணம் கொண்ட மலர்களால் நிறைந்து பெண் மகளாம் புவிமடந்தை நகைமுகம் கொண்டு மலர்மாரி சிந்தி மாயையை விளக்கும், கருப்பு வில்லோனுகிய காமனை வரவேற்கும்பொருட்டு விரித்த ஒரு வெண் பந்தலோ! என்று கூறும்படி விளங்கும். நீர் தடாகங்கள் பலவும் தாமரை, நீலம், குவளை, அல்லி முதலிய நறுமலர்களால் நிறைக்கப்பட்டு, காண்போரை கவர்வித்து நிற்கும். ஆகா யம், மேகக்கூட்டங்களினின்று விடுபட்டு, வெண்மேனி கொண்ட விமலனது உருவைப்போல் விளங்கும். மந்த மாருதம் வீசி மானிலத்துள்ளவரைக் களிப்பிக்கும். ஆடவரும் பெண்டிரும் அகங்களிப்பர். பேடையும் சேவ லும் பெருமை கொண்டாடும். மலர்த்தோகை விரித்து மயில்கள் ஆடும் இன்னை மொழியயின்று கோகிலம் களிக்கும். செந்தாமரையில் அன்னங்கள் சேரும். பைந்தார் மாலைகளை பாவையர் தரிப்பர்.

"தாதுகு சோலை தோறுஞ் சண்பகக்காடு தோறும்
போதவிழ்பொய்கை தோறும் புதுமணற் றடங்கள் [தோறு
மாதவி வேலிப் பூகவனந் தோறும் வயல்கள்தோறும்
ஓதிய வுடம்புதோறு முயிரென வுலாயதன்றே"

என்று கம்பர் கூறியபடி எங்கும் இன்பமயமான தென்றற்காற்று வீசி, தேமாமலரசைத்து தேனினை சொரிவதைப்போல் தேடற்கரிய இன்பத்தை தேடித்தந்து களிப்பிக்கும்.

இத்தகைய வசந்தகாலத்தை ரஜபுத்திரர்கள் வெ விநோதமாக கழிப்பது வழக்கம். ஆடவரும் பெண்டிரும இந்தப்பருவத்தில் செப்புதற்கரிய ஆனந்தம் கொண் அகம் களிப்பர். பெண்மக்கள் தம்மையொத்த வனிதை மார்களுடன் அழகிய சிறு மலர்க்கூடைகள் தமதுஉடுக்கை போன்ற சிற்றிடையில் தாங்கி சோலைகளை நாடி, மல கொய்து, மாலை செய்து, மகிழ்வுடன் சூட்டி, வேடிக்கை பேசி விளையாடிக்களிப்பர். ஆனுல் ஆடவர்கள் அவ்வாறு சிற்றின்ப சிலர்களாகவே முழுவதும் இருந்துவிடாம நண்பர்கள் பலருடன் புறப்பட்டு, அழகிய குதிரைகளின் மீதேறி நீண்ட வில்லும் அம்புப்புட்டிலும் தாங்கி ஆயுதா கள் பலதரித்து, காட்டையடைந்து, வேட்டையாடி காலங்கழிப்பர். வசந்தகாலத்தில் வேட்டைக்குச்செல்வது ரஜபுத்திரர்களுக்கு மிகப்பிரியமுள்ள ஒருவழக்கம். வேட டையாடும் இன்பத்தை நாடி, வசந்தத்தை அவர்கள் ஆ டுடன் வரவேற்றுகிற்பர். அந்தப்பருவத்தில் வேட்டை குச்செல்லாது வீட்டில் தங்கிவிட யாருக்கும் விருப்பமிரு பதில்லை.

வசந்தகாலம் வந்து தன்வரவை ஆவலுடன் எதி பார்த்து நின்ற ரஜபுத்திரர்களுக்கு பெருங்களிப்பை ஊட்டியது. உதயபுரத்தின் அழகிய வீதிகளிலுள்ள மாளி கைகளிலிருந்து கூட்டம் கூட்டமாக ரஜபுத்திரர்கள்

வேட்டைகருப் போகப்புறப்பட்டு விட்டனர். சிவந்தஅங்கிகளும் அழகிய தலைப்பாகைகளும் அணிந்து, குதிரையின் மீதேறி சிறு சிறு கூட்டங்களாக வேட்டைகாடி காட்டையடையலாயினர்.

உதயபுரத்தின் அரண்மனையின் வாயிலில் இரண்டு அழகிய குதிரைகள் சேணங்கள் சூட்டப்பெற்று, சவாரி போவதற்கு தயாராக நிறுத்தப்பட்டிருந்தன. சிறிது நேரத்திற்கெல்லாம் பிரதாபனும், சக்திசிம்மனும் அழகிய வேட்டை உடுப்புகளைத் தரித்து, இடையில் சொருகிய உடைவாளுடனும், கையில் தாங்கிய நீண்ட ஈட்டிகளுடனும், வெளிவந்து தத்தம் குதிரைகள் மேல் ஏறிக்கொண்டனர். இருவரும் மலர்ந்த முகத்துடன், குதிரைகளைத்தட்டி வேகமாக காட்டைநோக்கி நடத்திச் சென்றனர். காடுமுரடாயிருந்த மலைப்பாதையின் வழியே குதிரைகளிரண்டும் சமவேகத்துடன் சேர்ந்துபோய்க்கொண்டிருந்தன. ராஜகுமாரர்கள் இருவரும் சந்தோஷமாய் பேசிக்கொண்டே சென்றனர். முதலில் பிரதாபன் தம்பியை நோக்கி,

சக்த! இன்று காலையில் என்னுடன் பேசவேண்டுமென்று விரும்பி வந்தனையன்றோ? யாம் இன்று வேட்டைக்குச்செல்வதால், போகும்பொழுது பேசிக்கொள்வோம் என்று அப்பொழுது கூறிவிட்டு என் வேலைகளை முடிக்கச்சென்றேன். நீ என்னிடம் வந்த காரணத்தையும் பேசவிரும்பிய விஷயத்தையும், இப்பொழுது சாவகாசமாய்க் கூறுவாய் பேசிக்கொண்டே செல்வோமாகில் சீக்கிரம் காட்டையடையலாகும் கூறுவாய்! என்றான்.

( உடனே தனக்குள் சிறிது யோசித்து )

சக்தன்:—அண்ணா! ஆம் தங்களிடம் யான் இன்று காலை வந்தது ஒரு முக்கியமான விஷயத்தைக்குறித்தேயாகும். ஓர் எண்ணம் சில தினங்களாக என்மனதை அலைத்துக்கொண்டிருக்கிறது. விருந்துநடந்த சில மாதங்களுக்குப்பிறகு ஒரு நாள் நாமிருவரும் பேசிக்கொண்டிருக்குங்கால் என்னிடத்திலுள்ள தற்பெருமைக்குணத்தை தாங்கள்கண்டித்தபொழுது என்னைநோக்கி “ உன்னிடத்தில் பின்னால் விளங்கக்கூடிய துர்க்குணங்களை சிறுவயதிலேயே அறிந்துகொண்டுதான் நம் தந்தையார் நீ 5 வயது பாலனாக இருக்கும் பொழுதே உன்னை தேசப்பிரஷ்டம்செய்துவிட மனம் கொண்டார் போலும் என்று கூறினீர்களல்லவா? அவ்வார்த்தைகளை நினைத்து யான் சிறிது நாணமும் ரோஷமும் உடனே அடைந்தேனாயினும் சிலநாள் அதே விஷயமாக யோஜித்தேன். தாங்கள் கூறியது உண்மையோ? தந்தை என்னை தேசபிரஷ்டம் செய்தது நிஜமோ? என்று என்னால் அறியமுடியவில்லை என் செவிலித்தாயிடம் நான் பேசிக் கொண்டிருந்த பொழுது, அன்னவள் “ என் தந்தையின் பிரியத்துக்கு மிகவும் உரிமையுள்ள குமாரனாக ” யான் இருந்ததாகவும் “ பிற்காலத்தில் மீவாரத்தின் சிறந்த வீரனாக ” யான் விளங்குவேன் என்று கருதி யிருந்ததாகவும் கூறினள். அவ்வார்த்தைகளால் மகிழ்ந்திருந்த எனது உள்ளத்தை தங்கள் வார்த்தைகள் கொடிய தீயைப் போல் சுட்டன. ஆயினும் தங்களிடமிருந்தே என்னைப் பற்றிய உண்மைகளை அறியலாமென்றே இன்று தங்களிடம் வந்தேன். தாங்களும் வேட்டை மார்க்கத்தில் பேசுவோம் என்று கூறினீர்கள். இது தான் விஷயம் ”என்று கூறினான்

இதனைக்கேட்ட பிரதாபன் ஆ! சக்தா உன்மனதை புண் படுத்தும் படியான வார்த்தைகளை நான் கூறியதை நினைத்து எவ்வளவோ தடவைகள் யான் வருந்தினேன் உன்னிடத்து கடிந்து கூறிய மொழிகள் உன் நன்மையின் பொருட்டும், உன்னிடத்து யான் கொண்டுள்ள பேரபிமானத்தினாலுமே கூறப்பட்டன வென்பதை நீயறியாய் போலும். தந்தை உன்னைப் பற்றி கூறிய சங்கதிகள் சம்பந்தமாக உள்ள விஷயங்களை கூறுகிறேன். அதை நீ அறிய வேண்டியதும் அவசியமே, அதனால் நான் கூறிய வார்த்தைகள் உள்ளன்பினால் கூறப்பட்டனவென்பதை நீயறிதலும் கூடும் என்றான்.

சக்தன் ஒன்றும் பதில் உரையாது, தமயனது வாயிலிருந்து வரும் வார்த்தைகளை ஆவலுடன் எதிர் பார்ப்பவன் போல் அவனைப் பார்த்தான். அவன் குறிப்பை அறிந்து கொண்ட பிரதாபனும் உடனே ஆரம்பித்து,

அன்புடைய தம்பி! நீ பிறந்து 5 வயதுள்ளவனாக இருக்கும் பொழுது, ஒரு நாள், வடநாட்டிலிருந்து பெயர் போன சோதிடர் ஒருவர் நம் அரண்மனைக்கு வந்தார். சோதிட நூல் ஆராய்ச்சியிலும், ஜாதகபலன்கள் கூறுவதிலும், அன்னவருக்கு நிகராவார் அக்காலத்து ஒருவருமில்லை என்று தேசமுழுவதும் அவரைப் புகழ்ந்து கொண்டிருந்தது. அவருடைய பெரும் புகழை முன்னமேயே பலராலும் அறிந்திருந்த நம் தந்தையார் அவரை அன்புடன் வரவேற்று மரியாதை பல அளித்து, உபசாரம் செய்தனர். பின்னர், தன் குமாரர்களுடைய ஜாதகங்கள் ஒவ்வொன்றையும் காட்டி பலன் கூறும்படி சோதிடரை வேண்டினார். அவரும் அதற்கு இசைந்து, முறையே ஒவ்வொரு ஜாதகத்திற்கும் பலன் கூறிவிட்டு, கடைசியில் உன்னுடைய ஜாதகத்திற்கு பலன் கூறும் முறை வந்த பொழுது சிறிது மனங்கலங்கி “ இம்மகனால் உமது நாடு



பெரும் கஷ்டங்களுக்கு உள்ளாகும். பெயர் பெற்ற வீரனாய் விளங்குவானெனினும், மீவார நாட்டுக்கு இவன் சத்துருவே ” என்று கூறினார்.

சோதிடர் அரண்மனையை விட்டு நீங்கிய சில தினங்களுக்குப் பிறகு ஒரு நாள் தந்தையார் தம் நண்பர்கள் சிலருடன் ஆலோசித்து தேசத்திற்குப் பின்னால் சத்துருவாக விளங்கக்கூடிய ஒருவனை தன் குமாரனாக மதித்து அரண்மனையில் வளர்ப்பதிலும், அன்னவனை கொல்லுவித்து விடுதலே மேலென்று தீர்மானித்தனர்.

அத்தீர்மானத்தை அறிந்துகொண்ட சாளுவபுரத்தலைவன் அரசனது இணையடிகள் விழுந்து அவ்வாறுஉன்னைக் கொல்லுவித்தல் பெரும் பாதகமென்று கூறி, தான் எடுத்துச் செல்லுவதாகவும், மகப்பேறு பெறாத தனக்கு ஓர் சுவீகார குமாரனாக தான் வளர்ப்பதாகவும், தனக்கு அவ்வாறு அருள் செய்ய வேண்டுமென்றும் மன்றாடினான். அதற்கு அரசனும் ஒருவாறு இசைய, நீ சாளுவனது அரண்மனைக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு வளர்க்கப்பட்டனை. இரண்டு மூன்று வருஷங்களில் அரசன் இவ்வுலகவாழ்க்கையை முடித்தனர். யானும் பட்டமேறினேன். என் தம்பியாகிய உன்னை அயலான் ஒருவனின் மனையில்வைத்து வளர்த்து வருவதும், அரண்மனையில் நீ சம்மந்தமற்று இருப்பதும் எனக்கு சகிக்கமுடியாத துக்கத்தை யுண்டுபண்ணின. யான் ஒருவாறு யோஜித்து தந்தையின் கருத்து எதுவாகயிருந்தபோதிலும், உடன்பிறப்பாகிய உன்னை என்னிடம் சேர்த்துக் கொள்ளும்படி அவ்விருப்பத்தை சாளுவனிடம் தெரிவித்து உன்னை இங்கு கொண்டுவந்து சேர்க்கும்படி செய்தேன். அது முதல் நீயும் நானும் பாலும் நீரும்போல் ஒன்றுபட்டு உதயபுரத்தின் அரண்மனையில் வசித்து வருகிறோம். உன்னுடைய வாழ்நாள் மீவாரத்துக்கு தீங்காய் முடியுமென்ற சோதிடரின் கூற்றுப் பொய்யாகப் போகும் வண்ணம், உத்தம குணங்களுடன் உன்னை பிரகாசிக்கச் செய்ய வேண்டுமென்று கருதியே பற்பல சமயங்களிலும் உன்னை கண்டித்து திருத்தமுயன்றிருக்கிறேன். ஆயினும் சகோதர! நீ போதுமானபடி திருந்தி யிருக்க வில்லை, என்பதை யான் வருத்தத்துடன் கூற வேண்டியே இருக்கிறது; என்று கூறி முடித்தான்.

பிரதாபன் தான் கூற வேண்டியதை கூறிமுடித்தவுடன் சக்தனின் முகத்தை ஒரு முறை நன்கு உற்றுப் பார்த்தான். அவன் முகத்தில் விசேஷமாறுதல் ஏற்பட்டிருந்தது. முகம் சற்றுக் கருத்து, கண்கள் சிவந்திருந்தன. ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கி யிருப்பவன் போல் காணப்பட்டான். பிரதாபனுடைய கடைசி வார்த்தைகளில் இரண்டொன்று அவன் காதில் சரியாகப்பட்டிருக்குமென்பதும் சந்தேகமே. ( தொடரும். )

# கிராம உத்யோகஸ்தர்களும் டாக்டர் ஸர்டிபிகேட்டும்.

கிராம உத்தியோகஸ்தர் லீவு வேண்டுமென்று கேட்டால் டாக்டர் சர்ட்டிபிகேட்டு வாங்கிவரும்படியாக சில ரெவினியூ டிவிஷனல் ஆபீசர்கள் உத்தரவு செய்கிறார்களென்றும் மறுபடியும் லீவிலிருந்து திரும்ப வேலைக்கு ஆஜராகும்போதும் திரும்பவும் ஒருதரம் டாக்டர் சர்ட்டிபிகேட்டு வாங்கிவரவேண்டுமென்றும் சொல்லுகிறார்களென்றும் அறிவிக்கப்படுகிறோம். கிராம உத்தியோகஸ்தர்கள் லீவின் போனால் சம்பளம் கொடுக்கப்படுகிறதா? பென்ஷன் உண்டா? இந்த நிலைமையில் லீவு வாங்கிக் கொள்வதனால் கெவர்ன்மெண்டாருக்கு என்ன இடையூறு உண்டாகப்போகிறது? அனாவசியமாக ஒரு கிராம உத்தியோகஸ்தர் ஏன் லீவு கேட்கப் போகிறார்? டாக்டர் சர்ட்டிபிகேட் என்றால் இனாமாக கிடைக்கிறதா? அதிலும் ஒரு குறிப்பிட்ட டாக்டரிடமிருந்து வாங்கிவரவேண்டுமென்று சொல்வதால் அவர்கள் அதிக பீஸ் கேட்கக்கூசுவதில்லை. ஒருவர் ஆறுமாதம் லீவு கேட்டால் முதலில் டாக்டருக்கு ரூ. 20 பீஸ் கொடுக்கவேண்டியிருக்கிறது. இது நியாயமற்ற செய்கையாயிருக்கிறது ரெஜிஸ்டர்டு டாக்டர்களிடம் வாங்கிய சர்ட்டிபிகேட் உதவாது என்று சொல்வதும் அவர்களை அகௌரவப்படுத்துவதாகிறது. இந்த முறையினால் கிராம உத்தியோகஸ்தர்கள் படும் கஷ்டம் சொல்ல முடியவில்லை பலமான புகார்கள் நமது செவிக்கெட்டுகிறது. ரெவினியூ டிவிஷனல் ஆபீசர்கள் மற்ற சர்க்கார் உத்தியோகஸ்தர்களைப்போல் கிராம உத்தியோகஸ்தர்களை லீவு விஷயத்தில் நடத்துவது சரியல்ல. டாக்டர் பீஸை சர்க்காரிலிருந்து கொடுத்துவிடுவதாயிருந்தால் எத்தனை முறை வேண்டுமானாலும் சர்ட்டிபிகேட் பெற்றுக்கொள்ளட்டும். மிகுந்த கஷ்டத்தை யளிக்கிறதை உத்தேசித்து ரெவினியூ டிவிஷனல் ஆபீசர்கள் இனி இந்த விபரீத முறையை கைவிடுவார்களென்று நம்புகிறோம்.

# அன்னதானபலன்.

(126-வது பக்கம் தொடர்ச்சி)

வேடன் தூக்கத்தில் புரண்டு கீழேவிழுந்து விட்டான். ஒருமிருகம் அவனைக்கொன்று தின்று விட்டது. சூரியோதயமானவுடன் பையன் எழுந்து பார்த்தான் வேடனைக்காணவில்லை. வேடன் மனைவியால் வேடன் இறந்துவிட்ட சமாசாரத்தை அறிந்து கொண்டு, தனக்கு உபகாரம் செய்தவனுக்கு இந்தகதி ஏற்பட்டதே என்று மனவருத்தத்துடன் வழிநடந்து காடு மலை வனாந்திரங்களெல்லாம் கடந்து ஒரு ஊர் வந்துசேர்ந்தான். அவ்வூரில் ஒரு பிராமணன் அவனுக்கு ஏராளமான பூஸ்திதி உண்டு ஒரு காலைக்கு ஆயிரம் கலம் தானியம் கிடைக்கும் அவ்வளவும் அவ்வூர் ஏரி மராமத்துக்கேசரியாய்விடுகிறது. ஏனென்றால் தினமானம் அவ்வேரி மராமத்துசெய்வதும் உதயமானால் மறுபடி ஏரி உடைத்துக்கொள்வதுமாயிருந்தது. அதனால் ஆள்களும்தான்யங்களும் செலவாகிவிடுகிறது. அந்தபிராமணன் பையனைபார்த்து நீ யார்? எங்கிருக்கிறது? என்னகாரியமாய்வந்தாய் எங்கு செல்லுகிறாய்? என்றுவினவ, தன் வரலாற்றை சொல்லி அன்னதானப்பலனை பரமசிவனாலறிந்து கொள்ளப்போகிறேனென்று கூறக்கேட்டு மகிழ்ந்த பிராமணன், பையனுக்கு நல்விருந்தளித்து உபசரித்து பரமசிவனைக்கண்டு உன்குறை நிறைவேறின பின்பு, என்னூர் ஏரி தினம் உடைத்துக்கொண்டு போகிறதின் காரணத்தையும் அறிந்துவரவேண்டுமென்றுவேண்ட பையன் அதற்கிசைந்து விடை பெற்றுக்கொண்டு அவ்வூரைவிட்டுகாட்டிற்குள்செல்லுகையில் வழியில் ஒருமுடவன் கைகாலில்லாதவனாய் பசியால் மிகவருத்தமடைந்து பையனைநோக்கி எங்கு செல்கின்றீர் என்று வினவ, அன்னதானப் பலனையறிய பரமசிவனிடம் செல்லுகிறேனென்று கூற, ஐயா நான்முடவனாகி பசியால்வெய்யிலிற்படும் புழுபோல் வருந்துகிறதற்கு காரணமென்னவென்று பரமசிவனைக் கேட்டு தெரிந்து வரவேண்டுமென்று வேண்ட அதற்கிசைந்து விடைபெற்றுக்கொண்டு சிறிதுதூரம் செல்ல அங்கு ஒருநாகம் புத்தினின்று வெளிவர சக்தியில்லாமலும் கண்தெரியாமலும்பசியினாலும் கனவருத்தப்பட்டுக் கொண்டிருந்தது. பையனைக்கண்டு, ஓ ஐயா நீர் எங்குசெல்லுகின்றீரென்றுவினவ, பையன் அன்னதானப்பலனை அறிய பரமசிவனைக்காணப் போகிறேனென்றுகூற, நாகம் எனக்கு கண்தெரியவில்லை, பசியோஜாஸ்தியாயிருக்கிறது. இறையின்பேரிலோ விருப்பமில்லாமலிருக்கிறது. புத்தைவிட்டு வெளியில்வரக்கூடவில்லை, அதன் காரணத்தையும் கேட்டுவரவேண்டுமென்றுவேண்டிக் கொண்டது. அதற்கிசைந்துவிடைபெற்றுக்கொண்டு சிறிதுதூரம்சென்றான். அங்கு ஒருமாமரம் குலுங்க கப்பழுத்து ஒருவருக்கும் உதவியில்லாமலிருப்பதையும்தன்னிடத்தில் பறவை, விலங்கு, மனிதர் ஒருவரும் அணுகாதிருப்பதையும் கண்டு மனவருத்தமடைந்து பையனை பார்த்து ஐயா எங்கு செல்கின்றீர்? என்று வினவ பையன் தன் கருத்தைஉரைக்க, மாமரம் தன் விருத்தாந்தத்தை தெரிவித்து அதற்கு காரணத்தை தெரிந்துகொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டது. அதையும் கேட்டுக்கொண்டு சிறிதுதூரம் சென்றான். அங்குதோன்றிய ஒரு பெரியமலையைக் கண்டு இதுதான் தகுதியான இடமென்றுகருதி அங்கு ஐம்புலன்களையும் அடக்கி கடுந்தவம்புரிந்தான். இப்படி ஒருவருஷம்செல்லவே தபாக்கினியானது கைலயங்கிரியை அணுகிற்று. பரமசிவன் உடனே பார்வதி சமேதராய் ரிஷபாரூடராய் பையன்முன்பிரத்தியக்ஷமானார். பையன் கண்விழித்து பார்த்துஆனந்தக்கூத்தாடி பலவாறுதுதித்தான். பரமசிவன், உன் தவத்துக்கு மகிழ்ந்தேன், உனக்கு வேண்டிய வரத்தைக் கேள் தருகிறேனென்றார் பிராமணப்பையன் பேரானந்தமடைந்து சுவாமி சகலபாக்கியங்களும் தங்கள் தரிசனம் கிடைத்தவுடன் பெற்றேன். அன்னதான பலனையறிய விரும்புகிறேன் கிருபைபாலிக்க வேண்டுமென்று வேண்டினான். பரமசிவன் சந்தோஷமடைந்தவராய் அன்னதானபலனை அறியவேண்டிய கருத்துனக்கிருக்கின்றபடியால்சொல்லுகிறேன்கேள் விலாடதேசத்துக்கு அதிபதியாகிய அரசனுக்கு புத்திரனில்லை அவன் பிராமணர்களைப் பாதுகாத்து அவர்களுக்கு வேண்டிய உபசாரங்கள்செய்து அவர்களால் அட்சதையும் திருநீறும் தன்மனைவிக்கும் கொடுத்துவருகிறான். அதனால் புத்திரனுண்டாக மாட்டாது. நான் கொடுக்கிற இந்த அட்சதையையும் திருநீற்றையும் கொண்டுபோய் கொடு, இவற்றால் புத்திரனுண்டாகும். (தொடரும்)



# மன்னார்குடி தாலூகா.

## கிராம உத்தியோகஸ்தர்கள் சங்கம்.

மன்னார்குடி தாலூகா கச்சேரியில் 7-8-28௳ செவ்வாய்க்கிழமை கூடப்பட்டது.

President: M R Ry., P. R. கல்யாணசுந்தரம் பிள்ளை அவர்கள் அக்கிராசனம் வகித்தார்.

1. சென்ற மீட்டிங் நடவடிக்கைகள் படிக்கப் பட்டன.

2. பாஸ்பாசகாயநிதி ஏற்படுத்தவேண்டியது அவசியமென்று எல்லோராலும் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டது. அதுசம்பந்தமாக காலதாமதமன்னியில் மற்ற தாலூகா கி. உ. சங்கத்தோடு கடிதபோக்குவரத்து செய்து அடுத்த மீட்டிங்குக்குள் நிறைவேறும்படி காரியதரிசி செய்ய வேணுமாய்க் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

3. கிராம உத்தியோகஸ்தர்கள் சங்கம் ரிஜிஸ்டர் செய்யவேண்டிய விஷயம் நாகப்பட்டணம் தாலூகா விஜயபுரத்தில் 2—9—28ல் நடைபெறுவதாக நோட்டீஸ்படிக்குள்ள ஜில்லா சங்கத்தினுடைய மீட்டிங்கில் ஜில்லா சங்கம் ரிஜிஸ்டர் செய்வதாக முடிவு செய்யப்பட்டால் அத்துடன் நமது சங்கத்தை Affliate பண்ணிக்கொள்ளவாவது அப்படிச்செய்யாவிட்டால் நமது சங்கத்தை தனியாகவாவது ரிஜிஸ்டர் செய்யும்படி ஏகமனதாய் தீர்மானிக்கப் பட்டது.

4. கிராம உத்தியோகஸ்தர்களுக்குள் Limited கோவாபரேட்டிவ் சொஸைட்டி ஏற்படுத்தவேண்டிய விஷயம்:—கிராம உத்தியோகஸ்தர் கோவாபரேட்டிவ் சொஸைடி ஏற்படுத்தவேண்டியது அவசியமென்று தீர்மானிக்கப்பட்டது. அது விஷயமாய் வேண்டியவிதிகளைத் தெரிந்துகொண்டு அடுத்த மீட்டிங்கில் ஆஜர்படுத்தும்படி காரியதரிசியை கேட்டுக் கொள்ளுகிறது.

5 G. O. No. 1958 Dd. 14th Aug. 1920 Para No. 4 கண்டிருக்கிறபடி தாலூகா போர்டு ஓட்டர் லிஸ்டு கர்ணங்கள் தயார்செய்து. கொடுத்திருப்பதற்கு படி கொடுக்கும்படி உத்திரவாகவேணுமாய் தஞ்சை ஜில்லா கலெக்டர் அவர்களை கேட்டுக் கொள்வதாய் தீர்மானிக்கப்பட்டது.

6. ஜில்லா சங்கம் ஏற்படுத்தவேண்டியதற்காக நாகப்பட்டணம் தாலூகா சங்கத்தின் ஆதரவில் விஜயபுரத்தில் 2-9-28ல் கூடப்படுகிற மீட்டிங்குக்கு இந்த சங்கத்திலிருந்து அடியிற்கண்டவர்களை போகும்படி கேட்டுக்கொள்வதாய் தீர்மானிக்கப் பட்டது.

ஸ்ரீமான்கள் :—

P. R. கல்யாணசுந்தரம் பிள்ளை, President.
கோபாலகிருஷ்ணய்யர், Vice President.
G. கிருஷ்ணசாமி அய்யர், Secretary.
G. சுந்தரராமய்யர், Secretary.
S. கிருஷ்ணசாமி அய்யங்கார், புனவாசல்.
சுப்பையா முதலியார், குலமாணிக்கம்.
சீனிவாச அய்யங்கார், சித்தனக்குடி.
சவுந்தரராஜ அய்யங்கார், ராமனைன்கோவில்.
ஆராவமுத அய்யங்கார், புழுதிகுடி.
சந்தானராம அய்யங்கார், காளாச்சேரி.
சிவஞானதேவர், V. H. M., பறவாக்கோட்டை.
தியாகராஜய்யர், ராமபுரம்.
சீனுவாச அய்யர், குரிச்சிமூலை.
பெரியசாமி பிள்ளை, பாலக்குரிச்சி.
சொக்கலிங்கம் பிள்ளை, சிறுவாமணி.
ராமமூர்த்தி ராவ், நகர்.
ராஜகோபால பிள்ளை, வக்ராநல்லூர்.
ராமைய்யர், தெம்பரை.
கனகசபை முதலியார், குலமாணிக்கம்.
K. S. சுந்தரேச முதலியார், சாத்தனூர்.
துரைக்கண்ணு, ஒரத்தூர்.
நாகரெத்தினமைய்யர், நல்லூர்.
அய்யாத்துரை முதலியார், புள்ளமங்கலம்.
சுப்பிரமணிய பிள்ளை, மேலாளந்தசேரி.

7. மீட்டிங்கின் தீர்மானத்தை அச்சடித்து மெம்பர்களுக்கும் சம்பந்தப்பட்டவர்களுக்கும் அனுப்ப வேணுமாய் காரியதரிசி அவர்களுக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது.

# தஞ்சாவூர் தாலூகா.

## கிராம உத்தியோகஸ்தர்கள் சங்கம்.

இச்சங்கத்தின் மீட்டிங் 5—8—28ல் ஸ்ரீமான் அண்ணாசாமி அய்யங்கார் அக்கிராசனத்தில் நடந்தது. அநேக கிராம உத்தியோகஸ்தர்களும், கிராமானுகூலன் ஆசிரியர் ஸ்ரீமான் N. ஆபத்சகாய அய்யரும் விஜயம் செய்திருந்தார்கள். கிராம உத்தியோகஸ்தர்களுக்கு அனுப்பப்படும் உத்திரவுகளில் மரியாதையான பதங்களை உபயோகப்படுத்தவேணுமென்று G. O. ஏற்பட்டிருந்தும் அதைக்கவனியாமல் சிலசமயம் கர்ணம் கிராம நவுக்கர்கள் என்று எழுதினதைப்பார்க்க இச்சங்கம் மிக்க வருந்துவதாயும் இனி மரியாதையான பதங்களை உபயோகப்படுத்தி உத்திரவுகள் அனுப்பவேணுமாக இச்சங்கம் கேட்டுக்கொள்ளுகிறது. (உதாரணமாக தஞ்சாவூர் தாலூகா D. Dis. 2156 H/Dated 21-6-28 சர்க்குலர் உத்திரவைப் பார்க்க)

சென்ற மீட்டிங்கில் வில்லேஜ் ஆபீஸர்கள் காஷுவல் லீவைப்பற்றி தஞ்சாவூர்தாலூகா மகா-ா-ஸ்ரீ தாசில்தார் அவர்களுக்கும், மகா-ா-ா-ஸ்ரீ கலெக்டர் துரை அவர்களுக்கும் அனுப்பியிருந்தத் தீர்மானத்துக்கு கலெக்டர் துரை அவர்களுடைய D. Dis. 7616-28 Dated 30—6—28 தீர். உத்திரவை அனுசரித்து தாலூகா D. Dis. 394/Rev. Dated 15—7—28 உள்ள சர்க்குலர் உத்திரவு படித்துப்பார்த்து record செய்யப்பட்டது (சர்க்குலர் கீழேகாண்க.)

கிராம உத்தியோகஸ்தர்களுக்குத் தேவையான Forms சப்ளை செய்யும் முறையானது விசேஷசிலவையும் தொந்தரவையும் கொடுத்துவருவதால் மேலாபீஸிலிருந்து பாரங்கள் வந்தவுடன் ஒவ்வொரு கிராமங்களுக்கு ஏற்பட்ட திட்டப்படி ஸெண்டரல் தபாலில் வட்டவாரியாக அனுப்பவேணுமாய் இச்சங்கம் தீர்மானிக்கிறது.

கிராம கர்ணங்களுக்கு சப்ளை செய்யப்பட்டிருக்கும் Plan F. M. புஸ்தகங்கள் மறுசெட்டில்மெண்டுவரையில் சந்தோஷமாய் வைத்துக்கொள்வதை முன்னிட்டு சர்க்கார் சிலவில் பயிண்டுசெய்து கொடுக்கவேணுமாய் இச்சங்கம் கேட்டுக்கொள்ளுகிறது.

கிராமானுகூலன் பேபரை தாலூகா கி. உ.கள் வரவழைப்பதுடன் சங்கமூலமாய் நேஞ்சு ஒன்றுக்கு 4 காபிவீதமும் சங்கத்திற்கு ஒரு காபியும் ஆக 25 காபிகளுக்கு ரூ. 50 சங்கமூலமாய் வசூலித்து அனுப்பவேணுமாய் இச்சங்கம் தீர்மானிக்கிறது.

D. Dis. 394 Of 28.

### சர்க்குலர்.

#### கிராம உத்தியோகஸ்தர்களுக்கு

காஷுவல் லீவு கொடுக்கவேண்டியவிஷயமாய் தஞ்சாவூர் ஜில்லா கலெக்டர் அவர்களுடைய D. Dis. 7616 of 28 Dated 30—6—28 தேதியுள்ள முடிவான உத்திரவை எல்லா கிராம உத்தியோகஸ்தர்களுக்கும் அறிவிப்புக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. ஒரு கிராம உத்தியோகஸ்தர் ஒரேகாலத்தில் தொடர்ச்சியாய் 10 தினங்களுக்குட்பட்டு தன்னுடைய கிராமத்தைவிட்டு சொந்தவேலையாக வெளியே போகவிரும்பினால் அவர்களுக்கு பதிலியில்லாமல் பூராசம்பளத்துடன் உத்திரவு கொடுக்கப்படும்.

அப்படியன்னியில் 10 தினத்திற்குமேல் ஒரே சமயத்தில் கிராமத்தைவிட்டுப் போக நேர்ந்தால் அவருக்குப் பதிலி ஒருவர் நியமனம் செய்யப்படும். அந்தகாலத்திற்கு டை கிராம உத்தியோகஸ்தர்களுக்கு சம்பள பிடித்தத்தின்பேரில்தான் லீவு கொடுக்கப்படும்.

தாசில்தார், தஞ்சாவூர் தாலூகா.

Copy to the President Village Officers Association Tanjore Taluk with reference to the Resolution of the Association dated 8-7-28.

---

## கும்பகோணம் தாலூகா கி. உ. சங்கம்.

இச்சங்கத்தின் மீட்டிங் செம்மங்குடியில் 5—8—28ல் ஸ்ரீமான் அய்யாத்துரை உடையார் அக்கிராசனத்தின் கீழ் நடந்தது. அடுத்த மீட்டிங் செப்டம்பர் 2உ ஞாயற்றுக்கிழமை நாச்சியார்கோவிலில் கூடுவதாக தீர்மானிக்கப்பட்டது.

---

## சென்னை ராஜதானி.

### கிராம உத்தியோகஸ்தர்கள் சங்கம்.

இச்சங்கம் 1860ம் வருஷத்திய 21-வது ஆக்டுபடி ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது. இதன் விதிகள் மெ க்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதை அடுத்த சஞ்சிகையில் வெளியிடுகிறோம்.



## [illegible]சஜ தாலூகா கர்ணங்கள் சங்கம்.

[illegible]திருச்சினாப்பள்ளி தாலூகா கிராம கர்ணம் உத்தியோகஸ்தர்களின் சங்கத்தின் 3-வது பொதுக்கூட்டம் ஜானுமாதம் திருச்சினாப்பள்ளி கோட்டை பழக்கடைதண்ணீர் பந்தல் தோட்டத்தில் கூட்டப்பட்டது. முந்திய கூட்டங்களைவிட அதிக அங்கத்தினர்கள் ஆஜராகி மேற்படி சங்கத்தின் நடவடிக்கைகளில் வெகு உத்ஸாகத்துடனும் கலந்துகொண்டார்கள். சங்கத்தின் அக்கிராசனாதிபதி மிஸ்டர் வாஸுதேவராவ் அவர்கள் (வெள்ளித்திருமூத்தம் கிராம கர்ணம்) குறித்தநேரத்தில் வந்தவுடன் வழக்கப்படி தெய்வபிரார்த்தனையுடன் ஆரம்பிக்கப்படடு கீழ்கண்ட பிரேரேணைகளைப்பற்றி ஆலோசித்து தீர்மானிக்கப்பட்டது. (1) ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகசபை மெம்பர்கள் பிர்காவுக்கு 2 பிரதிநிதிகளுக்கு குறையாமல் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென பல அங்கத்தினர்களின் வேண்டுகோளுக்கிணங்க மற்றும் 6-பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். (2) ஜானுமாதம் வேலூரில் கூடப்போகும் ஜில்லா மகாநாட்டிற்கு கீழ்கண்ட பிரதிநிதிகளை மேற்படி கூட்டத்திற்கு இச்சங்கத்தின் சார்பாக மேற்படி மகாநாட்டின் நடவடிக்கைகளில் கலந்துகொள்ளவும் அபிப்பிராயங்களை வெளியிடவும் பல அங்கத்தினர்களின் ஆமோதிப்பின்பேரில் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். ஆர். வெங்கடராமய்யரவர்கள் கம்பரசம்பேட்டை கிராமகர்ணம் சங்கக்காரியதரிசி. வெங்கோபராவ் அவர்கள் பதாளபேட்டை கிராமகர்ணம் இறுதியில் ராஜவாழ்த்துடன் அன்றைய கூட்டம் கலைந்தது என்று காரியதரிசி எழுதுகிறார்.

---

## காவிரி ஜலம் பகிர்ந்துகொள்வதைப்பற்றித் தகராறு.

காவிரியாற்று ஜலத்தைப் பகிர்ந்துகொள்ளுவது சம்பந்தமாக 14-வருஷங்களாக நடந்துவந்த தகராறு 1924-வருஷம் பிப்ரவரி மாதத்தில் மைசூர் சென்னை கவர்ன்மெண்டுகளுள் நடந்த உடன்பாட்டினால் ஒருவாறு தீர்ந்தது. இதன்படி கண்ணம்பாடி அணையில் 112-அடி ஜலத்திற்குமேல் ஜலம் தேக்கியிருக்கக்கூடாதென்றும், ஆற்றின் தரைமட்டத்திலிருந்து 124 அடிக்குமேல் மதகுகளிருக்கவேண்டுமென்றும் முடிவுசெய்யப்பட்டது. மேட்டூர் திட்டத்தின் கீழ் சென்னை கவர்ன்மெண்டார் புதிதாகச் செய்யக்கூடிய நீர்ப்பாசன அபிவிருத்திகளுக்கும் [illegible] ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. 50-வருஷங்க[illegible] இதனைத்திருத்தியமைப்பதுபற்றி யோசனை

சென்னை கவர்ன்மெண்டார் காவிரியாற்றின் [illegible]களில் புதிய நீர்ப்பாசன வேலைகளைச் செய்தால் அதன் மூலம் சென்னை கவர்ன்மெண்டிற்கு எவ்வளவு ஜலம் கிடைக்குமோ அவ்வளவு ஜலத்தில் 100க்கு 60வீதமுள்ள ஜலத்தைத்தேக்கி வைக்கக்கூடிய ஏரிக்கு மைசூர் கவர்ன்மெண்டார் வேண்டிய ஏற்பாடுகளைச்செய்யலாம். 1892ம் வருஷத்திய ஒப்பந்தத்தில் காணப்படாத புதிய நீர்ப்பாசன வேலைகளைச்செய்து கொண்டுபோ[illegible]மைசூர் கவர்ன்மெண்டிற்குள்ள உரிமையை இந்தஉடன்படிக்கை பாதிக்காதென்ற ஷரத்துமிருக்கிறது. இந்த ஷரத்தினால் மைசூர் கவர்ன்மெண்டார் இர்வின்கால்வாயையும் அர்க்காவதி ஜலத்தேக்கத்தையும் கட்ட ஆரம்பித்திருக்கின்றனர். சென்னை கவர்ன்மெண்டார் மேட்டூர் அணையையும் சில ஜில்லாக்களில் சில நீர்ப்பாசன வேலைகளையும் ஆரம்பித்திருக்கின்றனர். காவிரியின் மட்டத்தை நிர்ணயித்தல், கண்ணம்பாடி தேக்கத்தில் தேங்கக்கூடிய ஜலத்தின் அளவை நிர்ணயித்தல், மைசூரிலுள்ள விவசாயிகளுக்கும் சென்னை மாகாணத்திலுள்ள விவசாயிகளுக்கும் உள்ள நீர்ப்பாசன உரிமைகளின் அளவை நிர்ணயித்தல் இவற்றைப்பற்றித் தற்பொழுது இரண்டு கவர்ன்மெண்டுகளுள்ளும் தகராறு நடக்கிறது.

---

## 40 லக்ஷ ரூபாய் வரி வஜா.

### கோதுமை விளையாததே காரணம்.

பஞ்சாப்கவர்ன்மெண்டாரால் 30 லக்ஷ ரூபாய் முதல் 40 லக்ஷ ரூபாய் வரை வரிப்பணம் வஜா செய்யப்பட்டிருக்கிறது. சில ஜில்லாக்களில் கோதுமை விளைவே இல்லாமல் போனதால் இவ்வாறு செய்யப்படவேண்டி வந்தது. 4 லக்ஷம் ஏக்கர்களுக்கு விளைவில்லாமையால் மிக்க எதிர்பாராதவிதத்தில் இத்தகைய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. தாராளமாக் கைக்கடன் கொடுக்க ஜில்லா உத்தியோகஸ்தர்களுக்கு உத்திரவிடப்பட்டிருக்கிறது.

இப்பிரதேசங்களில் உள்ள நிலச்சுவான்தார்கள் வரி வஜாவிற்காக ஒரு கிளர்ச்சியை ஆரம்பித்ததும் அவர்கள் சமீபத்தில் பிரதம காரியதரிசிக்கும் வரவு செலவு மெம்பருக்கும் முறையீடுகள் அனுப்பியதும் வரிவஜா செய்ய வேண்டுமென்று பஞ்சாப் சட்டசபையால் சமீபத்தில் ஒரு தீர்மானம் செய்யப்பட்டதும் நேயர்களுக்கு ஞாபகமிருக்கும். வரிகொடா இயக்கம் பஞ்சாபிலும் ஏற்படாமல் பஞ்சாப் கவர்ன்மெண்டார் இவ்வாறு உத்தரவு பிறப்பித்திருக்கின்றனர்.

223471

சி. சாமி அண்டு சன் வயலட் காபியிங் பென்சலை
உபயோகியுங்கள்.

ஒருமுறை வாங்கி உபயோகித்தால்
இதனுடைய உண்மை விளங்கும்.

ஸி. சாமி அண்டு சன்.,
ஜெனரல் மெர்ச்செண்ட் & அக்கவுண்ட் புக் மேக்கர்ஸ்,
நே. 242, சைனபஜார் ரோட், G. T. மதறாஸ்.

கம்மபாலன்.
மூன்றும் வருடம்.

பிரதி தமிழ் மாதக் கடைசியில் வெளிவரும் தமிழ்ப் பத்திரிகை.
வருட சந்தா ரூபாய் ஒன்றுதான்!
கிராமவாசிகளுக்கு இன்றியமையாதது! விளம்பர விகிதத்திற்கெழுதுங்கள்!
R. வெங்கடசாமி நாயுடு, பத்திராதிபர்,
கம்மபாலன் ஆபீஸ், திருத்தங்கல். (சிவகாசி சமீபம், S.I.R.)

என் கவலைப்படுகிறீர்கள்?

மாதிரிக்காப்பி இனம்! மாதிரிக்காப்பி இனம்!!

150 ரூ. முதல் 500 ரூ. வரை மாதம் சம்பாதிக்கலாம்!

எந்தவேலை செய்வது? எந்தவிதமாக சம்பாதிப்பது என்பதாக இனிக்கவலை வேண்டாம்! பரம ஏழைகளும்,ஏராளமாகச் சம்பாதித்து சுகமாய் ஜீவிப்பதற்குத்தகுந்த கைத்தொழில் முறைகளையும் புதிதுபுதிதான யோஜனைகளையும் மாதந்தோறும்போதித்துவரும் நம் "தொழிலாசிரியன்" எனும் மாதாந்தத் தமிழ் சஞ்சிகைக்கு இன்றே சந்தாதாரராகச் சேருங்கள்.

இதன் வருடச்சந்தா ரூ. 3 தான், வெளிநாடுகளுக்கு ரூ. 4.
மானேஜர் தொழிலாசிரியன் ஆபீஸ், சிவகெங்கை. (S.I.)



எங்களிடம் கிடைக்கக்கூடிய புஸ்தகங்களின் கிரய ஜாப்தா.

| புஸ்தகங்களின் விவரம். | ரப்காகிதம். | கிளேஸ் காகிதம். | காங்கரர் காகிதம். |
|---|---|---|---|
| வட்டி விவரவிளக்கம் என்னும் வட்டிஜர்திரி முதல் பாகமும், இதில் 1927 அக்ஷயவருஷத்தோடு முடிவான 60 வருஷங்களுக்கு தேதிஜர்திரியும் அடங்கிய ஒரே பயிண்டு (பக்கம்-250) ... ... ... ... | 1 4 0 | 1 8 0 | 2 8 0 |
| வட்டி விவரவிளக்கம் என்னும் வட்டிஜர்திரி இரண்டாவது பாகம் இதில் தேதிஜர்திரி கிடையாது. (பக்கம்-400) ... | 2 0 0 | 3 0 0 | 4 0 0 |
| ஷை இரண்டு புஸ்தகங்களும் ஒரே பயிண்டில் (பக்கம்-650) | 3 0 0 | 4 0 0 | கிடையாது |
| கிலத்தீர்வை ஜர்திரி (பக்கம்-200) ... ... | 1 4 0 | 1 8 0 | 2 8 0 |
| சம்பளக்கணக்கு ஜர்திரி (பக்கம்-32) ... ... | 0 6 0 | 0 8 0 | 1 0 0 |
| 1927-ம் வரு பிரபவவரு முதல் 60 வருஷங்களுக்கு தேதி ஜர்திரி (பக்கம்-120) ... ... ... | 0 12 0 | 1 0 0 | 2 0 0 |
| மேற்கண்ட 120 வருஷங்களின் தேதிஜர்திரியும் ஒரே பயிண்டு செய்தது (பக்கம்-240) ... ... ... | 1 4 0 | 1 8 0 | 2 8 0 |

வி. பி. செலவு தனி.

தேதிஜர்திரி, சென்ற 60 வருஷங்களுக்கு வேறாகவும், இனிமுதல் 60 வருஷங்களுக்கு வேறாகவும் இருப்பதால் வேண்டியவர்கள் இன்னநம்பர் இன்னகாகிதம் இன்னவிலையுள்ளது தேவை என்றும், தங்கள் விலாசங்களைத் தெளிவாயும் அடியிற்கண்ட விலாசதாருக்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

T. M. பஞ்சாபகேசய்யர், கும்பகோணம்.

## சந்தா நேயர்களே!

அடியிற்கண்ட கனவான்கள் "கிராமானுகூலன்" சந்தாத் தொகையை வசூலித்துக் கொடுப்பதாக அன்புடன் இசைந்துள்ளார்கள் அவர்களிடம் நமது ரசீது புஸ்தகம் கொடுக்கப்பட்டிருக்கிறது. தங்கள் சந்தா தொகையை ஷை யார்களிடம் கொடுத்து ரசீது பெற்றுக்கொள்ளலாமென்று தெரிவித்துக்கொள்ளுகிறோம். இதனால் மணிபார்டர் கமிஷன் லாபமாகும்.

ஸ்ரீமான் G. கிருஷ்ணஸாமி அய்யர், கர்ணம், அன்னவாசல், காரியதரிசி, கி.உ. சங்கம், மன்னார்குடி.
ஸ்ரீமான் G. சுந்தரராமய்யர், காரியதரிசி, கி.உ. சங்கம், கர்ணம், சித்திரையூர்.
ஸ்ரீமான் கோபாலகிருஷ்ணய்யர், வைஸ்பிரசிடெண்டு, கி. உ. சங்கம், கர்ணம், பழயனூர்.
ஸ்ரீமான் V. M. சந்தானமய்யங்கார், கர்ணம், காளாச்சேரி.
ஸ்ரீமான் T. R. ராமச்சந்திரய்யர், கர்ணம், விக்கிரபாண்டியம்.
ஸ்ரீமான் V. சுப்பராமய்யர், காரியதரிசி, கி. உ. சங்கம், தஞ்சாவூர்.
ஸ்ரீமான் S. முத்துஸாமி ஐயர், கிராம முன்சீப், சித்தமல்லி.
ஸ்ரீமான் சுப்பிரமணிய ஐயர், கர்ணம், தலைநாயர் முதலசேத்தி.
ஸ்ரீமான் R. அப்புசாஸ்திரிகள் கர்ணம், நீர்முளை.
ஸ்ரீமான் S. கிஷ்ணமூர்த்தி ஐயர், கர்ணம், ஆலத்தம்பாடி.
ஸ்ரீமான் கிஷ்ணமூர்த்தி ஐயர், கர்ணம், திருப்பந்துறை.
ஸ்ரீமான் T. S. சொக்கப்பா முதலியார், காரியதரிசி கி. உ. சங்கம், கர்ணம், நெய்க்குப்பை.
ஸ்ரீமான் S. ரெங்கனுகராவ், கர்ணம், சிக்கிநாயக்கன்பேட்டை.
ஸ்ரீமான் கிஷ்ணமூர்த்தி ஐயர், கர்ணம், பந்தநல்லூர்.

மணம் மிகுந்தவை ! குணம் நிறைந்தவை !!

# ஜெயலெக்ஷ்மி அண்டு கோ

## அத்தர் வியாபாரம்,

## பெரியகடைத்தெரு, கும்பகோணம்.

முக்கிய கவனிப்பு.

இதனால் தெரிவித்துக்கொள்வது யாதெனில் :—எங்களால் தயாரிக்கப்படும் ஸாமான்கள் மற்றவர்களைப்போல் வீணான படாடோபமன்னியில் ராஜாங்க பண்டிதர்களால் கையாளப்பட்டுவந்த முறைகளில் சொல்லியபடிக்குள்ள மூலிகை சரக்குகள் பூராவையும் சேர்த்து செய்பாகம் தவராது உயர்ந்தமாதிரியாக மணம், குணம், கலம் இம்மூன்றும் ஒத்திருக்கும்படித் தயாரித்து நேயர்களுக்கு நன்மையைச்செய்து அதனால் நாங்கள் தக்க ஸர்டிபிகேட்டுகளும் பெற்றிருக்கிறோம் ஸ்ரீமான்கள் அன்புடன் நமது வாஸனாசாலைக்கு விஜயம் செய்து நேரில் பார்த்துக்கொண்டு தங்கள் சிநேகிதர்களுக்கும் நமது வாஸனாசாலையைப்பற்றி சிபார்சுசெய்து நல்லாதரவு அளிக்கும்படி வேண்டுகிறோம்.

உயர்தர மாதப் பத்திரிகை !] உ [இரண்டாவது வருடம் !!

3000 சந்தாதாரர்கள்.

# கிராமானுகூலன்.

கிராம உத்தியோகஸ்தர்களுக்காக உண்மையாயும், தைரியத்துடனும் விசேஷ தியாகம்செய்து உழைத்துவருகிற

## ஸ்ரீமான் N. ஆபத்ஸகாய ஐயர், பத்திராதிபர்.

மிராசுதார்கள், விவசாயிகள், கிராமஉத்தியோகஸ்தர்கள், ஆரம்ப ஆசிரியர்கள், பிரான்சு போஸ்டு மாஸ்டர்கள், ஐக்கிய நாணயச்சங்கங்கள், கிராம சுகாதாரம், லோகல் போர்டுகள், கிராமபுனருத்தாரணம் முதலிய விஷயங்களைப்பற்றி அநேக மேதாவிகளால் எழுதப்படும் அரிய விஷயங்களுடனும், தேசபக்தி புகட்டும் சிறந்த நாவல்களுடனும் வெளிவரும் ஓர் உயர்தர மாதப்பத்திரிகை. ஆங்கிலமாதச் சஞ்சிகைகளுக்கு சமானமாய் கிரௌன் 1-க்கு 4-அளவில் மிக உயர்தரமாய் நடத்தப்படுகின்றது இதுபோன்ற தமிழ்மாதச் சஞ்சிகை வேறகிடையாது. தமிழ்நாடெங்கும் புகழ்வாய்ந்த பத்திரிகை இதுவே.

கிராம உத்தியோகஸ்தர்கள் ஒவ்வொருவரும் சந்தாதாரராகத் தவறமாட்டார்கள் என்று நம்பப்படுகிறது. தங்கள் சிநேகிதர்களுக்கும் சிபார்சுசெய்து சந்தாதாரராகும்படி செய்யுங்கள்.

வருட சந்தா ரூபா 2—0—0 வெளிநாடுகளுக்கு 2—8—0

விளம்பரம் செய்வோர்களுக்கு ஏற்ற பத்திரிகை.

மானேஜர் :—“ கிராமானுகூலன், ”

மருதாந்தநல்லூர், திப்பராஜபுரம், P. O., (தஞ்சை ஜில்லா.)


Printed at the Sri Kamakshi Amman Press and Published by N. Apathsagaya Aiyer at Kumbakon

ஆதரணைக் கர்த்தர்கள்

ஸ்ரீமான் N. வெங்கட்டராம ஐயர் அவர்கள்.

ஸ்ரீமான் K. S. சிவசுப்பிரமணிய ஐயர் அவர்கள், M. L. C.,

போஷகர்

ஸ்ரீமான் T. S. துரைஸாமி பிள்ளை அவர்கள்,

கிராம முன்சீப், திருப்பனந்தாள்.

## கிராமானுகூலன்.

சந்தா விபரம்,

| | | | | |
|---|---|---|---|---|
| போஷகர்களுக்கு வருஷம் 1-க்கு | ரூ. | 50 | 0 | 0 |
| அபிமானிகளுக்கு ,, | .... | 15 | 0 | 0 |
| ஜீவிய சந்தா | .... | 25 | 0 | 0 |
| வருடசந்தா இந்தியா, பர்மா, சிலோன் | ... | 2 | 0 | 0 |
| அயல்நாடுகளுக்கு (சிங்கப்பூர் பினாங்கு, மோரீஸ், நேட்டால்) | .... | 2 | 8 | 0 |

பத்திரிகாபிமானிகள் போஷகர்களாகவும் அபிமானிகளாகவும், ஜீவிய சந்தா தார்களாகவும் சேர்ந்து ஆதரிக்கவேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

மானேஜர்.


கும்பகோணம் தென் இந்தியா கன்பெக்ஷனரி

பாக்டரியில் தயாரிக்கப்படும்

**பெப்பர்மெண்டையே உபயோகியுங்கள்!**

**என்?**

என் எனில் இந்திய மூலதனத்தைக்கொண்டு இந்தியர்களால் நடத்தப்படும் தொழிற்சாலை இதுவே வெகு நேர்த்தியானவை என்று புகழ்பெற்றது! விலை நயம்! ஒருமுறை தருவித்துப்பாருங்கள்! உண்மை விளங்கும்!

விலை விபரத்திற்கு உடனே எழுதுங்கள்!

THE SOUTHERN INDIA CONFECTIONERY FACTORY,

**KUMBAKONAM.**

தமிழ்ச் செய்யுளின் கருத்தாகும். இத்தகைய பழக்கத்தினை யுடையவர் தமிழராயின் அவர்களது மேம்பாடு எத்துணைச் சிறந்ததாகும் என்பது கருதத் தக்கது. அனைவரும், அனைத்தும் அறிஞர்க்கு அடக்கம் என்பது அன்னாரது கொள்கை. 'நல்லாரிணக்கமும் நின் பூஜை நேசமும் ஞானமுமே' எமக்குத் தேவை என்பர் பிற்காலத்துச் சான்றோர் பலரும். இன்னும் "அமிர்தமாயினும் எவரும் அதனைத் தனித்து உண்ணுதல் கூடாது. எவரையும் வெறுத்தல் கூடாது. உடலின் துன்பத்திற்குப் பயந்து வேலை செய்யாது சோம்பி யிருத்தல் கூடாது. உயிரைக் கொடுத்தும் புகழைக் கைக்கொள்ளல் வேண்டும். உலகம் முழுவதும் கைவரினும் பழிப்புக் கிடமானவற்றைச் செய்தல் கூடாது. கவலையை அறவே நீக்கவேண்டும். இவை மக்கட்பிறவி எடுத்தார் கைக்கொள்ள வேண்டிய நற்பழக்கங்களாம். இத்தகையினர் சிலரேனும் இருக்கும் நாடே நிலைத்திருக்கும் தகுதியினையுடையதாம்" என்பர் ஒரு தண்டமிழ் அரசர். இவற்றினும் மேம்பட்ட நற்பழக்கம் உண்டோ?

## முயற்சி.

இவ்வாறு சிறந்த பழக்கத்தில் நிலைத்திருந்த நமது பண்டைத் தண்டமிழ் மக்கள் முயற்சியுடைமையிலும் தலை சிறந்து விளங்கினார்கள். எந்தச் சிறு முயற்சியும் உயரிய நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டதாகத் தோன்றுவன. ஊழ்வினையாகிய விதியே முயற்சியினும் மேம்பட்டது என்ற கொள்கையினை யுடையராயினும் முயற்சி யின்மையால் எடுத்த காரியம் இனிது கைகூடவில்லை என்ற பழிச் சொல் தங்களை அணுகலாகாது என்பதில் கண்ணுங் கருத்துமாயிருந்து வந்தார்கள் என்பது பல வரலாறுகளால் அறியப்படுகின்றது. எவ்வளவுதான் கற்று வல்லவராயிருப்பினும் முயற்சியின்றிச் சோம்பியிருப்பவர் எவ்வித அற்பப் பயனையும் அடையமாட்டார் என்ற கொள்கை தண்டமிழ் நாட்டிலே பெரிதும் நிலை பெற்றிருந்தது. 'புலியும் உணவின் பொருட்டு முயலுகின்றது. எலியும் உணவின் பொருட்டு முயலுகின்றது. புலியோ தன்னால் அடித்துக் கொல்லப்பட்ட மதங்கொண்ட யானை இடது பக்கத்திலே விழுந்ததானால் அதனை உண்ணாது; அன்று முழுமையும் பட்டினியாகவேயிருந்து மறுநாள் பிறிதொரு யானையை அடித்துக் கொன்று வலப்பக்கத்தில் வீழ்த்தி உண்ணும்; இன்றேல் இறந்துபடும். எலியோ விளைந்த நெற்கதிர்களைச் சொந்தக்காரர் அறியாது கவர்ந்துகொண்டு சென்ற சிறிய வளையிலே கொண்டு வைத்து உண்டு உயிர் வாழும். இந்த உவமையை உணர்ந்த தமிழர்கள் யாண்டும் புலிபோன்று தன்மதிப்பு நிறைந்த துறையிலேயே முயன்று வந்தார்கள். முயற்சியுடையோர் ஊழையும் உப்பக்கம் காண்பர். தளராத முயற்சியைப் பற்றுக்கோடாக வுடையவர் ஊழின் வன்மையைக் கெடுக்கும் ஆற்றலினையும் பெற்றுத் திகழ்வர். மெய்வருத்தக் கூலி தருவது முயற்சியே. முயற்சியின்மை இன்மையிலே புகுத்திவிடும். முயற்சி திருவினையாக்கும் என்பன தமிழர்கள் இளமையில் கற்றுக் கொள்ளும் உறுதியுரைகளாம்.

## செல்வம்.

இன்னணம் இன்றியமையாக் காரியங்களின் உயரிய நோக்கத்துடன் முயன்று வாழ்ந்த தமிழர்கள் செல்வத்தைப்பற்றியும் தெளிவான கருத்துடையவர்களாகத் திகழ்ந்து வந்தார்கள். பொருளிலார்க்கு இன்பமில்லை, புண்ணியமில்லை, கீர்த்தியில்லை அறிவில்லை. அதிகம்கூறுவானேன்? அன்னார் நடைப்பிணம் எனவே உலகினரால் கருதப்படுவர் ஆதலால் இவற்றிற் கெதிராகப் பொருளுடையோர் அறம், இன்பம், வீடு என்ற ஏனைய முப்பெரும் பேறுகளையும் பொருளாலெய்துகின்றனர். அன்னார் எவ்வளவு குறைபாடுகளை உடையவராயினும் சிறிதும் பழிக்கப்படுவதில்லை. அவரிடத்திலுள்ள பொருட் செல்வம் அவையனைத்தையும் மறைத்துப் பலரும் மெச்சுமாறு செய்துவிடுகின்றது. இவ்வளவு சிறப்புக்கள் செல்வத்திற்கு உண்டு என்பது அத் தமிழ்மக்கள் உணர்ந்துவைத்ததே. எனினும், அவர்கள் செல்வத்திற்குக் கொடுக்கவேண்டிய பெருமையையேகொடுத்துவந்தார்கள். செல்வம், ஓடுகின்ற தண்ணீரிலே மீன் போன வழியைப்போல் விரைவில் அழியக்கூடியது. அகடுற யார்மாட்டும் நில்லாதது. செல்வத்தால் ஆகிய பயன் தம்மிடம் வந்து இரப்போர்க்கு இல்லை என்னாது குறிப்பறிந்து கொடுத்தலே. அங்ஙனமின்றித் தாமே அநுபவிப்பது என்பது பல குற்றங்களுக்கும் ஆதாரமானது கடல் சூழ்ந்த உலகத்தைப் பொதுச்சொல் இன்றி ஏகச்சக்ராதிபதியாய் நின்று ஆண்டுவரும் அரசர்க்கும், இரவு பகல் தூங்காமல் வேட்டையாடும் தொழிலையே மேற்கொண்டு ஒழுகும் மறவருக்கும் உணவுக்கு வேண்டியது நாழி அரிசியே, உடைக்கு வேண்டியது நான்கு முழமே.

(தொடரும்)



# கூட்டுறவு மளிகைகளிலே விளையும் பொது நன்மைகள்.

223471

[ஸ்ரீமான் ஊ. சா. வேங்கடராம ஐயர்]

கூட்டுறவு மளிகையிலே வேண்டிய சாமான்களை வாங்குவது, எல்லோருக்கும் உதவி செய்வதோடு தரித்திரம் என்னும் பிணியை ஓரிடத்திலும் தங்கவிடாமல் ஓட்டுதற்குத் தகுதியான பல ஸ்தாபனங்களையும் உண்டாக்கும். இப்படி வாங்குவதில் எவர்க்கும் (தாம் வாங்கும் சாமான்களுக்குரிய விலையைக் கொடுப்பதன்றி வேறு) எவ்வித கைப்பொருளும் நஷ்டமாவதில்லை; ஆனால், வாங்குவோர்க்குப் பொருள் மிகுதியாதல் கூடும். அங்ஙனம் வாங்குவோர் தமக்கு உதவிசெய்து கொள்வதிலேயே பிறருக்கும் உதவி செய்தவராகின்றார். இது வரையினும் 'பயனற்றது' என்று கருதி வந்த ஒருசிறிய வியாபாரத்திலும் இத்தகைய புதிய குணத்தைக் காண்பது சிறிது ஆலோசனை செய்பவர்க்கும் எளிதாகும்.

சாமான்களை விலைக்கு வாங்கும்போது 'பிறருக்கும் அதனால் நன்மை உண்டாகும்' என்று நாம் பொதுஜனங்கள் எவரும், இதுவரையில் நம்பியதில்லை. 'அப்படி வாங்குவதனால் பல நன்மைகள் உண்டாகும்' என்று அறிவது பரோபகார சிந்தையுள்ளவர்க்கு மிக அவசியமானது. பொதுவாக ஜனங்களுடைய முன்னேற்றத்திற்கு இஃது ஒரு சிறந்த வழியாகும்.

கூட்டுறவு மளிகைகளை இத்தகைய மேலானவை என்று கருதுவது, முதல் முதல் ஒவ்வொருவருக்கும் இருக்கவேண்டிய முதன்மையான குணமாகும். அதிற்சேர்ந்த எவரும் சுய நலத்தைக்கருதுபவராக இருத்தல் கூடாது. மற்று எங்ஙனம் கருதுவோராதல் வேண்டுமெனில் 'இதிற் சேர்ந்திருப்பதனால் நாம் நமக்கும் உதவி செய்துகொண்டு நம்மையல்லாத பிறர்க்கும் உதவிசெய்ய முடியும்; அன்றியும் நியாயம், பரஸ்பர உபகாரம், மேன்மை, தன்மதிப்பு ஆகியவைகளை அடிப்படையாகக்கொண்ட பல ஸ்தாபனங்களை உண்டாக்குவதும் ஆகும்' எனக்கருதுவோராதல் வேண்டும் என்க.

மேற்கண்ட விஷயங்களைச் சற்று விவேகத்துடன் அறிந்துகொள்ளும் சாமான் வாங்குவோர் எந்தனும் ஒரு கூட்டுறவு மளிகையிலேயே தமக்கு வேண்டிய சாமான்களை வீண நஷ்டங்களுதாமல் வாங்கி வருவார் என்பதும், அதனை விட்டுப்பிற தனித்த மனிதர்கள் சுய லாபங்கருதி வைத்திருக்கும் கடைகளிலே தமக்கு வேண்டிய சாமான்களை வாங்கமாட்டார்கள் என்பதும் ஒருதலை.

அத்தகைய பிற மனிதர்கள் வைத்த கடைகளிலே சாமான்களை வாங்கிவருவது மேற் பார்வைக்கு லாபம்போற் காட்டுவதுடன் சில தற்கால அநுகூலங்களையும் காட்டலாம். சிறிது உற்றுநோக்கில் அக்கடைகளில் வாங்குவதால் விளையும் பலதிறப்பட்ட தீமைகளையும் சாமானியர்களும் எளிதில் அறிந்து கொள்ளுதல் கூடும்.

ஐக்கிய வாதிகள் கூட்டுறவு மளிகைகளிலேயே தங்களுக்கு வேண்டியவற்றை வாங்கிவருவதும், பிறரையும் வாங்குமாறு தூண்டிவருவதும் மேல் நோக்காகத் தோன்றும் அத்தகைய அற்ப அநுகூலங்களைக் கருதியல்ல. ஆனால், சுயலாபத்தையே கருதித்தனித்த மனிதர்களாற் செய்யப்படும் வியாபாரக் கடைகளில் வாங்குவதால் விளையும் குறைபாடுகளையும், கூட்டுறவு மளிகைகளில் வாங்கிவருதலால் விளையும் நியாயம், பரோபகாரம், தன்னலமறப்பு, தம்மை அறியாது துன்பமின்றிப் பொருள் மிகுதல் ஆகிய உயரிய பயன்களையும் அறிந்ததால் என்க.

கூட்டுறவு மளிகைகளிடத்தில் அபிமானம் வைத்தல் என்றால், அதற்கு 'ஒருவன் தன்னுடைய கொள்கைகளிடத்திலும், தனது மனச்சாட்சியிடத்திலும், தன்னுடைய நண்பர்களிடத்திலும் நம்பிக்கை வைத்தல்' என்பது பொருளாகும்.

கூட்டுறவு மளிகைகளை ஸ்தாபிப்பவர்கள் தங்களுடைய கடமைகளை நன்றாய் அறிந்தவர்களேயன்றி அதனை மறந்து சுயலாபத்தை நாடுகிறவர்களல்ல.